575/94

செந்தமிழ்ச் செல்வி
66 6
பிப்ரவரி 1992

031 211,827
ந92.66.6
191729

செந்தமிழ்ச் செல்வி

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
வரலாற்று ஆராய்ச்சி
19..
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008.

உள்ளுறை

	பக்கம்
தமிழ்க் கலை வளர் தசாவதானி ஆறுமுகம் பிள்ளை நூற்றாண்டு விழா	௨௦௧
மரபியல் ஆராய்ச்சி	௨௦௫
அப்பரடிகளின்—"குறுந்தாண்டகம்"	௨௦௯
புதுவைப் பேச்சு வழக்குகள்	௨௧௫
டாக்டர் மு. வ. தமிழ் வாழ்க்கை	௨௧௮
தொல்காப்பியம் தமிழாக்கமா?	௨௨௬
செய்திகள்	௨௩௦
மதிப்புரை	௨௩௪

சிலம்பு-௬௬ ★ பரல்-௬ பிப்ரவரி 1992
திருவள்ளுவர் ஆண்டு-௨௦௨௩ தை

"செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் இதழ்)

நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை

இதழாசிரியர் குழு

பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்

முனைவர் தமிழண்ணல்

முனைவர் பொன். சௌரிராசன்

முனைவர் பொன். கோதண்டராமன்

முனைவர் கு. பரமசிவன்

முனைவர் கு. சுந்தரமூர்த்தி

முனைவர் சொ. சிங்காரவேலன்

கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்

முனைவர் வீ. ப. கா. சுந்தரம்

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.,

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

ஏழிசை —டாக்டர் புரட்சிதாசன், டி. லிட்.	25	00
சிலப்பதிகாரக் கூத்து ,, ,,	20	00
பாவேந்தரின் தமிழ்ப் போராட்டங்கள்	20	00
காட்டு மலர்கள்—சு. சண்முகசுந்தரம்	16	00
க. நா. சு. இலக்கியத்தடம்—ப. கிருஷ்ணசாமி	25	00
ஒரு வானம்பாடியின் இலக்கிய வானம் —தமிழ்நாடன்	20	00
கறுப்பு யுத்தம்—இரா. நடராசன்	15	00
The Spring of the Indus Civilization	15	00
Prasada Yoga —Swami Siva Nandhi	15	00
சைவசித்தாந்தக் கட்டுரைகள்	10	00
திருக்குறள் துளிகள்—முனைவர் மலையமான்	20	00
வாழ்வில் வெற்றியடைய வழிகள்—மாரியப்ப அடிகள்	27	00
Pallava Bhavani—M. Kuppusami	24	00
மழை மேகம்—வே. இராசவேலன்	14	00
சிலம்பும் மணியமும்—ச. சிவகாமி	30	00

ஸ்ரீரங்கம் சித்தர் நூல்கள்

சித்தர்களின் ஞானப்பாடல்கள்	12	00
நீங்களும் சித்தராகலாம்	4	00

975/94

செந்தமிழ்ச் செல்வி

தி. வ. ௨௦௨௩-தை

பிப்ரவரி—1992

சிலம்பு-௬௬ பரல்-௬

தமிழ்க் கலை வளர் தசாவதானி ஆறுமுகம் பிள்ளை நூற்றாண்டு விழா

கொஞ்சு தமிழ் குலவி வரும் நஞ்சையம் பதியெனும் நாஞ்சில் நாட்டில் கோட்டாற்றில் பிறந்து, அருந்தமிழ் பயின்று ஆசுகவியாகத் திகழ்ந்து அவதானக் கலை பயின்று, தசாவதானியாக உயர்ந்து திருவாவடுதுறை ஆதீனப் பிரச்சாரகராய் விளங்கி, அந்தாதியும் ஆற்றுப்படையும், சதகமும் வெண்பாவுமென ஆயிரத்துக்கும் மேற்பட்ட பைந்தமிழ்ப் பாடல்களை இயற்றிய பெருமாள் பிள்ளை பெற்றெடுத்த அவதானி ஆறுமுகம் பிள்ளையின் நூற்றாண்டு விழா இனிதே நடைபெற ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

'அவதானம்' என்பது அரியதொரு நினைவாற்றல் கலை. அறிவும் புலமையும் மட்டுமன்றிப் பல்வேறு சூழல்களில் பலவற்றை நினைவில் கொண்டு இட்ட பணியை அறுதியிட்ட நேரத்திற்குள் பல்லாயிரக் கணக்கானோர் முன்னிலையில் செய்து முடிக்க வேண்டியதொரு பணி. இக்கலையில் சிறந்தவர் 'அவதானி' என்றும் 'கவனகர்' என்றும் அழைக்கப்பெறுவர். அட்டாவதானி (எண் கவனகர்) தசாவதானி (பதின் கவனகர்) சதாவதானி (நூற்றுக் கவனகர்) என்று எத்தனை வகையான ஆற்றல் பெற்றவர்களாக விளங்குகிறார்களோ அவ்வவற்றின் பெயர் கொண்டு அழைப்பதுண்டு.

நம்மிடையே வாழ்ந்து மறைந்த தசாவதானி பெ. இராமையா பிள்ளை, தற்போது கோவில் பட்டியில் வாழ்ந்து வரும் பதின் கவனகர் திரு. கனகசுப்புரத்தினம் போன்றோர் அண்மைக்காலத்தில் குறிப்பிடத் தக்கவராவர். திரு. பெ. இராமையாபிள்ளை பார்வையற்ற நிலையிலும் தமிழகத்து மேடை தோறும் அவதான நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டி மக்களை வியப்பில் ஆழ்த்தியவர்.

1949ஆம் ஆண்டு. திசம்பர் 11, சென்னை, புரசை, எம். சிடி. எம். பள்ளி; நத்தம் கோட்டாறு வாழ் நம்புலவர்

O31 ம211, ல27
N92.66.6

ஆறுமுகனாரின் அவதான நிகழ்ச்சி. முன்னிலை வகிப்போர் : திரு. வி. க. தெ. பொ. மீ. ரா. பி. சேதுப்பிள்ளை, மு. வ. கி. வா. ஜ. சிலம்புச் செல்வர் ம. பொ. சி. முதலியோர். நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள் நகைச்சுவையரசு கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்,—டி. கே. சண்முகம்.

இறை நாமம் நவில்தல், இலாடச் சங்கிலி கழற்றல், இலக்கியம், இலக்கணம், கவிபாடல், கிழமை கூறல், சோதிடம், கண்டத்தொகை, கண்டப்பத்திரிகை, கல்லெறி என்னல் இவை பத்தும் எடுத்துக்கொண்ட அவதானப் பொருள்கள்.

அவதானியார் கைகள் இலாடச்சங்கிலியால் பிணைக்கப் பெற்றிருக்கின்றன. மேனி முழுதும் வெண்ணீறு. முதுகிலே சிறுகல் அவ்வப்போது விழுந்துகொண்டிருக்கிறது.

'கைத்தலை வைத்தான் சங்கரன்' என்ற ஈற்றடியைக் கொடுத்து வெண்பா இயற்றச் சொல்கிறார். கி. வா. ஜ

1899 சனவரி 16 என்ன கிழமை என்று கேட்கிறார். உயர் நீதி மன்ற நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர்.

ஒரு தொடரை மனந்தில் வைத்துக்கொண்டு ஒவ்வோர் எழுத்தாக முறை மாற்றிச் சொல்கிறார் நகைச்சுவையரசர் என். எஸ். கே.

சென்னை மேயர் இராமசாமி நாயுடு தம் சாதகத்திலுள்ள கிரக நிலைகளைக் கூறிப் பலன் கேட்கிறார்.

புலவர் பாலூர் கண்ணப்ப முதலியார் பெரிய புராணச் செய்யுள் ஒன்றைக் கூறி விளக்கம் கேட்கிறார்.

இலக்கணக் கேள்வி இடையிடையே எழுகிறது.

எப்பக்கம் கூட்டினாலும் 488 வரவேண்டுமென்று 16 கட்டங்களில் தக்க எண்களை நிரப்பச் சொல்கிறார் ஒருவர்.

மூன்று மணிநேரத்திற்குள் அத்தனை பணிகளையும் முடித்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்துகிறார் அவதானியார்.

அவர்தம் நிகழ்ச்சியைப் பாராட்டாத அறிஞர்களே இடையாது. ரசிகமணி டி. கே. சி, கவிமணி தேசிக விநாயகர், கா. சுப்பிள்ளை, இ. மு. சு. பு. சி. புன்னைவன நாதர், இலக்கைப் பெரியார் கிக்ஸரி, நீதிபதி கே. ஜி. சேஷய்யர்

191729
சென்னை-600 003

போன்ற பலர் அவதானியார் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பாராட்டியுள்ளனர்.

நாகர் கோவில் கோட்டாறு பகுதியில் 1891 மார்ச் திங்களில் தோன்றியவர் அவதானியார். திண்ணைப் பள்ளியில் அண்ணாவியாரிடம் தமிழும் கணிதமும் கற்றார். சைவப் பற்று மிக்க தந்தையாரிடம் சைவ சாத்திர, தோத்திரக் கல்வி. முத்து சோதிடரிடம் முறையான சோதிடக் கல்வி. சதாவதானி செய்குத் தம்பிப் பாவலரிடம் முறையான தமிழ் இலக்கிய. இலக்கணக் கல்வி-அத்துடன் தாம் கைவரப் பெற்றிருந்த அவதானக் கலையையும் பாவலர் ஆறுமுகனார்க்குப் பயிற்றுவித்தார்.

வாழ்க்கைப் பணியாகக் கடையில் கணக்கெழுதும் வேலையை மேற்கொண்டார். மாலை நேரங்களில் இலக்கிய வகுப்புகளும் பொழிவுகளும். வேலையை வீண் வேலை என்று விட்டு விட்டார். இவர்தம் புலமையையும் ஆற்றலையும் அறிந்த திருவாவடுதுறை குருமகா சன்னிதானம் அவர்கள் ஆதீன சமயப்பரப்புனர் பணியில் அமர்த்தி வாழ்நாள் பணியாக இறைவனை வழிபடும் பணியையே அளித்தார்.

பணிக்களமாக அவதானியார் சுசீந்திரம் தாணுமாலயன் திருக்கோயிலையே தேர்ந்தெடுத்தார். அறிவு வழங்க தாணு விலாசம் புத்தகசாலை என்னும் நூலகத்தை 1928இல் தொடங்கினார். சமயப்பரப்புப் பணியுடன் அறிவு பரப்பும் பணியையும் ஏற்றுக்கொண்டார். நூலகத்திற்கு வருவோருக்குத் தமிழ் இலக்கிய, இலக்கணப் பாடங்கள் நடத்தினார். தாம் பயின்ற அவதானக் கலையை ஊர் தோறும் சென்று நிகழ்ச்சிகள் வாயிலாக வெளிப்படுத்தினார். இடையிடையே நேரம் கிடைத்த போதெல்லாம் இலக்கிய நூல்கள் படைப்பதில் ஈடுபட்டார்.

இவரியற்றிய நூல்கள் தில்லை வளாகம் பதிற்றுப் பத்தந்தாதி, குசேல வெண்பா, சேரமண்டல சதகம், சுசீந்தை பதிற்றுப் பத்தந்தாதி, திருக்குறள் பாரத வெண்பா, திருப்பதி ஐம்பொருள் மாலை, மருங்கூர் இரட்டை மணி மாலை, சைவ சித்தாந்த சாரவெண்பா, துறைசை ஆற்றுப் படை, அண்ணாமலை மன்னர் காவியம், சசிவோத்தம நான் மணி மாலை. மதுர மணிமாலை, கந்தபுராண அம்மானை போன்றவை. இவற்றில் சில நிறைவு பெறாதவை.

நாஞ்சில் நாட்டை உள்ளடக்கிய சேரநாட்டின் பெருமையை எடுத்துக் கூறுவது சேரமண்டல சதகம். பாண்டி மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம் போன்ற மண்டல சதகங்களைப் பின்பற்றிப் பாடப்பெற்றது.

திருக்குறள் பாரத வெண்பா மகாத்மா காந்தியடிகளின் பெருமையை எடுத்துக் கூறி 'பாரதமே' என்ற விளியுடன் பாடப்பெற்ற வெண்பாக்களையுடையது. முதல் இரண்டடி காந்திமகானின் பெருமை: பின்னிரண்டடி திருக்குறள் பாடல். நூல் நிறைவு பெறாததால் 255 பாடல்களே உள்ளன. 1330 குறளுக்கும் பாடல் எழுத எண்ணியுள்ளார். பணி நிறைவேறவில்லை. திருக்குறட் குமரேசவெண்பாவை யொத்த நூல்.

திருவனந்தபுரம் அரசுப் பணியிலிருந்த சர். சி. பி. இராமசாமி ஐயர் மீது பாடப்பெற்றது சசிவோத்தம நான்மணிமாலை.

முன்பு ஒருமுறை இவருடைய அவதான நிகழ்ச்சியின் போது கவிமணியும் நீதிபதி சேஷய்யா என்பவரும் உடனிருந்தனர். அப்போது இவர் அவதானத்தைக் கண்டு நீதிபதி சேஷய்யா வியந்து "சபாஷ்! பேஷ்!" என்றாராம். இதைக் கவிதையில் அமைத்துக் கவிமணி கீழ்வரும் பாடலைப் பாடினார்:

"ஆறுமுகம் பிள்ளை அவதானம் கண்டெளியேன்
வேறுமுக மன்கூற வேண்டுமோ?—தேறுமதிச்
சேஷய்யா மெச்சித் திருவாய் மலர்ந்து சபாஷ்
பேஷய்யா வென்ற பிறகு."

இத்தகு ஆற்றல் பெற்ற அவதானியாரின் நூற்றாண்டு விழா சென்னையில் சிறப்புற நடைபெறவுள்ளது. இவர்தம் பாக்களில்

செந்தமிழ்ச் செல்வி திருநடனங் கண்டேன்
வந்தனஞ் செய்தேன் மகிழ்ந்து"

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடிப் போற்றியது போல் அனைவரும் போற்றிப் பாராட்டி மகிழ்வோமாக.

மரபியல் ஆராய்ச்சி

கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்

(முன் இதழ், பக். கஎக-ன் தொடர்ச்சி)

ஓர் இடத்தில் இருந்து ஓர் இடத்திற்கு ஒருவர் நடக்கிறார். அவர் நடைப்பதிவு பலருக்கும் வழிகாட்டியாகிவிடுகின்றது. அப்பதிவின் வழியே மற்றவர்களும் நடக்கின்றனர். பலரும் பல்காலும் நடந்து பதிவாகியது, பாதையாய் நிலைபெறுகின்றது. தடம், தடி, வழித்தடம், வழி, பெருவழி என்பனவெல்லாம் இவ்வாறு நிலைத்தனவே. மொழிப் பதிவும் இவ்வாறு அமைந்ததேயாம்.

முதற்கண் ஒருவன் தடம் பதிக்கவே தெளிவும் திறமும் வேண்டும். முதல்வன் தடம்பதித்துப் பாதையாக்கிவிட்டால் அப்பாதையில் மாறாமல் போவது எளிதாகிவிடும். அது போலவே, மொழி மரபுகள் வல்லாரால் வகுக்கப்பட்டனவே எனினும், கல்லா மாந்தரும் வழி வழி வழக்கால் எளிதில் போற்றிக்கொள்ள வாய்க்கின்றது. இந்நாட்டில் பிறந்து வளர்ந்த ஒருவர் கல்வி நிலையங்களுள் கால்வைக்காதவர் எனினும் கூட, ஆட்டுக் குஞ்சு, கோழிக்குட்டி என்று வாய் மறந்தும் சொல்லமாட்டார் அல்லரோ?

'கஞ்சி குடித்தல்' என்பாரே ஒழிய 'கஞ்சி சாப்பிட' 'கஞ்சியுண்ண' என்று சொல்ல மாட்டாரே, குழலூதலைக் 'குழலடிக்க' என்று விளையாட்டுப் பிள்ளைகளும் கூடச் சொல்லமாட்டாவே! ஏன்? மரபு குருதியோடு குருதியாய் ஊறிப் போய்விட்டது என்பதே.

மரத்தின் மரபு இயல்பானது. ஆனால், மொழி மரபு போற்றிக்கொள்ளும் முறையைப் பொறுத்தே நிலைப்பது. ஒரு மரத்தின் வித்தினை ஊன்றி நீர்விட்டால் அதன் இயல்பு மாறாமல் முளைத்து வளரும்! "விதையொன்று போடச் சுரையொன்று முளைக்குமோ?" என்னும் பழமொழியே இதனைத் தெளிவிக்கும். ஆனால் மொழிமரபு மரமரபு போல் தானேயோ வந்துவிடுகின்றது? அம்மா, அப்பா, அத்தை, அம்மான் என்பவற்றை எத்தனை ஆயிரமுறை கேட்டு அதன் பின்னர் சொல்வதற்கு அறிந்துகொள்கின்றது குழந்தை! தானேயே அறிந்துகொள்வது இல்லையே! இவ்வாறு அருமை

யாய் அமையும் மரபும், மொழிவார் அறிவுநிலை, பயிற்சி நிலை ஆகியவை போலன்றோ அமைகின்றது! கற்றவர் மொழி நிலைக்கும் கல்லாதவர் மொழிநிலைக்கும் வேறுபாடு உண்டே! கற்றவர் மொழிநிலையிலும், எத்துணை ஏற்றத் தாழ்வுகள்! இப் பலபகுதிப்பட்டோர் மரபுகளில் எதனை எடுத்துக் காட்டாக-முன்னீடாக-வழிகாட்டியாக முறைமையானதாக—கொள்ளவேண்டும்?

இனி, வட்டாரந்தோறும் குடிவழிதொறும் மொழிநிலை வேறுபடக் காண்கிறோமே! இவற்றுள் எவ் வட்டாரத்தினர் மொழியையும், எக்குடியினர் மொழியையும் அளவுகோலாகக் கொண்டு மரபு என்பது? இவ்வைய வினாக்கள் எழுமென்றே ஆசிரியர் தொல்காப்பியனார்,

> "வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
> நிகழ்ச்சி அவர்கட் 'டாக லான"

என்றார். இதனையே ஒருவகையால், "வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்னும் வழக்குக்கு இழுக்கும் உண்டே!" என்றார் தாயுமானவர்! இஃது 'ஒழுக்கம்' என்றும், 'இஃது ஒழுக்கமற்றது' என்றும், 'இது முறை' என்றும், இது 'முறையற்றது' என்றும் நாம் எப்படி உறுதிப்படுத்துகிறோம்? உயர்ந்தோர் ஒழுகலாற்றைக் கொண்டே உறுதிப்படுத்துகின்றோம் அல்லமோ! இழிமாந்தர்-கயவர்-இன்னோர் ஒழுகலாற்றையும் செயல் முறையையும் ஒழுக்கமெனக் கொள்வது இல்லையே! இதுபோலவே, மொழி மரபும் உயர்ந்தோர் மொழியையே அளவுகோலாகக் கொண்டு முடிக்கப்பெறும் என்க.

'மரபு', பழஞ்சொல் ஆதலால் காலந்தோறும் அதன் பொருள் விரிவுற்று வந்தமை அறிய முடிகின்றது.

விஞ்சையன் ஒருவன் தந்ததாம் ஓலையைச் சீவகன் 'மரபினால் நோக்குகின்றான்' என்றார் திருத்தக்க தேவர். உயர்ந்தவர் ஒருவர் தரும் பொருளை வாங்கும் முறையின் வாங்குதல் இன்றும் வழக்காறுதானே! ஆனால் இவன் ஓலையை வாங்குதலைக் குறிக்காமல் படித்தலைக் குறிப்பதால் இத்தொடரில் வரும் மரபு என்னும் சொல்லுக்கு 'வழிபாட்டோடே' எனப் பொருள் கண்டார் நச்சினார்க்கினியர் (842).

மரபு என்பதைக் குலவழி அல்லது குடிவழி என்னும் பொருளில் கண்டார் கம்பர்; 'சூரியன் மரபு' என்பது அவர் வாக்கு (கிட். வாலி: 87). குணம், பழமை, முறைமை ஆகிய பொருள்களில் மரபினை நிகண்டு நூல்கள் வழங்குகின்றன.

மரபின் இலக்கணம் இன்னது என்பதை, "எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர், செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே" எனத் தெளிவாக்குகிறார் நன்னூலார் (388).

இந் நூற்பாவுக்குப் பொருள் விரித்த இராமாநுசக் கவிராயர் "மரபு-பழைய முறைமை: வ—று: யானைக்கன்று யானைக்குட்டி, குதிரைக்குட்டி, பசுவின் கன்று, மான்கன்று, யானை மேய்ப்பான் பாகன், ஆடுமேய்ப்பான் இடையன், யானையிலத்தி, எருமைச்சாணி என்றாற்போல்வன எனக் காண்க.

"இனி, இவ்வாறன்றிப் பசுவின் குட்டி, குதிரைக் கன்று, யானைச் சாணி, எருமையிலத்தி எனக் கூறுதல் வழுவாம் ஆதலால், வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் வழங்கிவரும் மரபு தேர்ந்து கொள்க" என்றார். பிறர் பிறரும் இவ்வாறே மரபினை விளக்கினர். இனித் தொல்காப்பிய மரபியல், இயலும் வகையைக் காண்போம்.

இந்நூல் இன்னது கூறப்புகுகின்றது என்றும், இவ்வியல் இன்னது கூறப்புகுகின்றது என்றும் கூறிப் புகுதல் நூன் முறையாம்; இம் முறைமையே பிற்காலத்தோர் 'நுதலிப்புகுதல்' என ஓர் உத்தியாக வகுத்துக்கொண்டனர். அன்றியும் நூன் முகமும், இயல்முகமும் இதுவாக இருத்தலால் உத்திகளை எண்ணுங்கால் முதலாவதாக நுதலிப்புகுதலை அமைத்துக் கொண்டனர். அது தக்கதேயாம். தொல்காப்பியர் ஓர் இயலில் மட்டுமன்றி, அதன் உட்பகுதிகளிலும் நுதலிப்புகுதலை நெறியாகக் கொண்டவர் என்பதை அவர் நூலை மேலோட்டமாகக் காண்பாரும் தெளிவாக அறிய வைத்துள்ளார். இம்மரபியலும் அதற்கு விதிவிலக்கு இல்லையாம்.

மரபியலின் தொடக்க நூற்பாவில் மரபு என்பது இது எனக் கூறும் ஆசிரியர், அதிலேயே இளமைப் பெயர்களையும் உரைக்கிறார். அடுத்துள்ள இரண்டு நூற்பாக்களில் ஆண்பாற்பெயர்களையும் பெண்பாற் பெயர்களையும் இவை எனத் தொகுத்துரைக்கிறார்; தொகுத்துரைத்த இவற்றின்

விளக்கத்தை முறையே நான்குமுதல் அறுபத்தொன்பதாம் நூற்பா முடிய உரைக்கிறார். எழுபதாம் நூற்பாவில்

''பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே''

என்று எடுத்துச் சொன்ன முப்பகுப்பையும் நிறைவுறுத்துகிறார்;

தாம் வைத்த வைப்புமுறை இளமை, ஆண்மை, பெண்மை என்றிருக்க, நிறைவில் பெண்ணும் ஆணும் பிள்ளையும் என்றார்; இஃதொரு நயம் கருதியதாம்.

இளமைப் பெயரையே முந்துறக் கூறி விளக்கமும் உரைத்தார் எனினும் பெண்மைப் பெயரைத் தானே இறுதியில் நிறைவித்தார்; அதற்கு முற்படக்கூறியது ஆண்மைப் பெயர் தானே? அதற்கு முற்பட்டது இளமைப் பெயர் அன்றோ! தொடக்கத்தில் கூறு முறையில் கூறிய அவர், நிறைவில் எதிர் முறையில் குதித்தார்; இவ்வாறு நிரையிலும், எதிர் நிரையிலும் கூறுதல் அவர்க்கு இயல்பாதல்,

''அறமுத லாகிய மும்முதற் பொருள்'' (1363)

என்று எண்ணிய அவர், ''இன்பமும் பொருளும் அறனும்'' என்று எண்ணியமையால் (1038) தெளிவாம். இனி மரபியலில் ஆசிரியர் சுட்டும் குறிப்புகளைக் காண்போம்.

(தொடரும்)

காக்காய்த் தண்ணீர்

புதுவை மாவட்டத்தில் கிணற்று நீரின் சுவையைக் குறிப்பிடுவதற்கு, அது இனிமையாக இருப்பின் 'காக்காய்த் தண்ணீர்' போல் இருக்கிறது என்பார்களாம்: ''சுவையான கிணற்று நீரைக் 'காக்காய்த் தண்ணீர்' என்று கூறுவதைக் கேட்டிருக்கிறேன். முதலில் இந்த வழக்கைக் கேட்டது மலைப்பாக இருந்தது. பின்னர்ப் பேசிப் பார்த்ததில் கால்காய் தண்ணீர் என்பதே காக்காய்த் தண்ணீர் என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. கால்காய் என்பது இளநீரைக் குறிக்கும்.'' (பி. எல். சாமி: புதுவைப் பேச்சு வழக்குகள். அமுதசுரபி. திசம்பர் 90); தேங்காயில் இளநீரைக் கால்காய் என்றும் பாதி விளைந்ததை அரைக்காய் என்றும் முற்றிய காயை முழுக்காய் என்றும் கூறும் வழக்கு உண்டு.

அப்பரடிகளின்—''குறுந்தாண்டகம்''

செஞ்சொற்கொண்டல், தமிழாகரர், நல்லாசிரியர்,
முனைவர். சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.
[தமிழ்ப் பேராசிரியர், அ. வ. அ., கல்லூரி, மயிலாடுதுறை]

பக்தி இலக்கியக் கால வடிவம்:

'குறுந்தாண்டகம்', 'நெடுந்தாண்டகம்' ஆகியவற்றின் இலக்கணங்களைத் தொல்காப்பியத்தில் பார்க்க இயலாது; இவை வடமொழி இலக்கண வழக்கைத் தழுவித் தமிழிற் புகுந்த இலக்கிய வடிவங்களே; இவை இவ்வாறு தமிழில் வருகை புரிந்த காலத்தைப் 'பக்தி இலக்கியக் காலம்'' என்று பொதுவாகக் குறித்தாலும், திருமங்கையாழ்வார் காலத்தைச் சிறப்பாகக் குறித்தல் பொருந்தும். (1) பெரிய திருமொழி (2) திருக்குறுந்தாண்டகம் (3) திருநெடுந்தாண்டகம் (4) சிறிய திருமடல் (5) பெரிய திருமடல் (6) திருவெழுகூற்றிருக்கை என்ற ஆறு நூல்களைத் திருமங்கையாழ்வார் அருளினர் என்பர். நம்மாழ்வார் அருளிய (1) திருவாய்மொழி (2) திருவாசிரியம் (3) திருவிருத்தம் (4) பெரிய திருவந்தாதி என்ற நான்கு நூல்களையும், 'நான்கு வேதங்கள்' என்றும், அவற்றிற்கு அமைந்த 'ஆறு அங்கங்கள்' திருமங்கையாழ்வார் அருளிய ஆறு நூல்கள் என்றும் வைணவர் கருதுவர்.

பன்னிரு பாட்டியல் இலக்கணம்:

பன்னிரு பாட்டியல் இவற்றுள் இருவகைத் தாண்டகங்களுக்கும் இலக்கண வரையறை செய்துள்ளது:

''மூவிரண் டேனும் இருநான் கேனும்
சீர்வகை நாட்டிச் செய்யுளின் ஆடவர்
கடவுளர்ப் புகழ்வன தாண்டகம்; அவற்றுள்
அறுசீர் குறியது; நெடியது எண்சீராம்''

''ஒவ்வோரடியினும் அறுசீரேனும் எண்சீரேனும் வகையாக அமைத்து இயற்றிய நான்கடிச் செய்யுளான் ஆடவரையும், கடவுளரையும் புகழ்வனவாகிய அவ்விருதிறத்து நூல்களும் 'தாண்டகம்' எனப்படும்; அவற்றுள் அறுசீரடிப் பாக்களைப்

பெற்று வருவது குறுந்தாண்டகம் என்றும், எண்சீரடிப் பாக்களைப் பெற்று வருவது நெடுந்தாண்டகம் என்றும் கூறப்படும்'' என்று இந் நூற்பாவிற்கு அறிஞர் கா. ரா. கோவிந்தராச முதலியார் உரை காண்பர். [பார்க்க: பன்னிரு பாட்டியல்—கழகப் பதிப்பு]

அறுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம் எனப்படும் இலக்கிய வடிவங்களே இவை என்பது பொதுவாகப் புலப்படும் செய்தியாகும்.

ஏனைய யாப்பு நூலாசிரியர் :

பல்காயனார், மாபூதனார், சீத்தலையார் என்று மூன்று ஆசிரியர்களின் நூற்பாக்கள் ஒப்புமையாக அவ்வுரையின் கீழ்க் காட்டப்பட்டன; அவை வருமாறு :

''அறுசீர் எண்சீர் அடிநான்கு ஒத்தங்(கு)
இறுவது தாண்டகம்; இரு மூச்சீரடி
குறியது; நெடியது இருநாற் சீரே''

''மங்கல மரபின் மானிடர் கடவுளர்
தம்புகழ் உரைப்பது தாண்டக வகையே''

''தாண்டகம் மானிடர் கடவுளர்க் குரித்தே''

''அடிவரை நான்கும் வரும் எழுத்தெண்ணி
நேரடி வருவது தாண்டகம் ஆகும்''

வீரசோழிய வடமொழி மரபு :

''வீரசோழிய'த்தில் தண்டகச் செய்யுளிற்கு இலக்கண வரையறை யாப்புப் படலத்தில் பின்வருமாறு கூறப் பெற்றுள்ளது :

''ஒன்றாதி யென்பர் ஒருசார் ;
அவரொரு நான்கு முன்னாம்
என்றால் இனிது ; சந்தத்தின்
எழுத்தை இருபதின்மேல்
நன்றாய வானுயர் வாமென்
றுரைப்பர் ; நற்றண்டக மேல்
பின்றாத கட்டளை நான்கு
முன்னாகிப் பெருகிடுமே''

'இலகு' 'குரு' என்ற எண்ணிக்கை குறித்த வீரசோழியம் உடையார் கருத்து பின்வரும் நூற்பாவால் தெளிவாகும் :

''ஏறிய நெட்டெழுத்தே, நெடிலொற்றே எழில்வடநூல்
கூறியசீர்க் குறிலொற்றே குருவாம்; குறிலதுவே
வேறியல் செய்கை இலகுவென் றாகும்; வியன்குறிலும்
ஈறியலிற் பிறிதாம்; இருகாலென் றியம்புவரே''

'மூத்துவீரியம்' மொழிவது :

எழுத்தெண்ணி 'இலகு' 'குரு' என்ற அமைப்பிற்கேற்ப வீரசோழியம் தெரிவித்த கருத்தினை அடியொற்றி, 'மூத்து வீரியம்' பின்வரும் நூற்பாவைப் படைத்துள்ளது :

''இருபத்தே ழெழுத்து ஆதி யாக
உயர்ந்த எழுத்து அடியின வாய், எழுத்தும்
குருவும் இல்குவும் ஒத்து வந்தன
அளவியல் தாண்டகம் எனவும், அக்கரம்
ஒவ்வாதும் எழுத்தலகு ஒவ்வாதும் வந்தன
அளவழித் தாண்டகம் எனவும் பெயர்பெறும்''

அடியின்கண் பயிலும் எழுத்தெண்ணிக்கையை வைத்துச் சந்தமும் தாண்டகமும் கணக்கிடலை இந் நூற்பா இனிது விளக்குகின்றது. இருபத்தேழு எழுத்திற்கு மேல் அடிதோறும் வரும் நிலை இத் தாண்டகத்திற்கு உரியது என்பது கருத்து; இதனை இருவகைப்படுத்துவதும் கருதத் தக்கது; [பார்க்க 'மூத்து வீரியம்'; கழகப் பதிப்பு]

தாண்டகம் வடமொழி இலக்கணமரபு :

அசை வகுத்துக் காண்பதே தமிழ் வழக்காய் இருக்க, 'இலகு' 'குரு' என்ற வடமொழி வழக்கைத் தமிழிற்குக் கொண்டுவரும் புது முயற்சியாகவே இவ் விலக்கண வரையறை உள்ளமை தெளிவு: உயிர் எழுத்து, உயிர்மெய் யெழுத்து என்பவற்றுள் குற்றெழுத்து ஒன்று வருவது 'இலகு'; எ-டு: அ, க; ஒரு குறில் ஒற்றடுத்து வருவது, ஒரு நெடில் தனியாக வருவது, ஒரு நெடில் ஒற்றடுத்து வருவது 'குரு'; எ-டு: அல், கல்; ஆ-கா; ஆல்-கால்.

''தாண்டகம் என்பது தமிழ் இலக்கணம் பற்றி வந்த செய்யுள் அன்று; வடமொழி இலக்கணம் பற்றி வந்த

செய்யுள் ஆகும்'' என்பர் அறிஞர் கா. ர. கோ., தமிழில் உள்ள தாண்டகங்களுக்கும் வடமொழியில் அமைந்த தாண்டகங்களுக்கும் தொடர்பு ஏதேனும் உண்டா என்று சிந்தித்தல் வேண்டும்.

திருமங்கையாழ்வாரின் திருவாக்கில்:

திருமங்கை யாழ்வார் பாடியுள்ள 'குறுந்தாண்டகம்' 20 பாடல்களைக் கொண்ட அறுசீர் விருத்தங்களே; எ-டு:

''நிதியினைப் பவளத் தூணை
 நெறிமையால் நினைய வல்லார்
கதியினைக் கஞ்சன் மாள
 கண்டுமுன் அண்டம் ஆளும்
மதியினை மாலை வாழ்த்தி
 வணங்கியென் மனத்து வந்த
விதியினைக் கண்டு கொண்ட
 தொண்டனேன் விடுகி லேனே'';

திருநெடுந்தாண்டகம் 30 பாடல்களைக் கொண்ட எண்சீர் விருத்தங்களே; எ-டு:

'மின்னுருவாய் முன்னுருவில் வேத நான்காய்
 விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தானாய்
பின்னுருவாய் முன்னுருவிற் பிணிமூப் பில்லாப்
 பிறப்பிலியாய் இறப்பதற்கே எண்ணா தெண்ணும்
பொன்னுருவாய் மணியுருவிற் பூதம் ஐந்தாய்ப்
 புனலுருவாய் அனலுருவில் திகழும் சோதி
தன்னுருவாய் என்னுருவில் நின்ற எந்தை
 தளிர் புரையும் திருவடியென் தலைமேலவே''

அப்பரடிகளாரின் திரு நேரிசைகளே:

அப்பரடிகள் பாடியுள்ள 'திருநேரிசை' ப்பதிகங்களையே 'குறுந்தாண்டகம்' என்று, இந்த இலக்கண அடிப்படையில் கூறுகின்றோம்; அப்பரடிகள் காலத்திலேயோ, சேக்கிழார் காலத்திலேயோ இவற்றைக் குறுந்தாண்டகம் என்று கூறும் வழக்கு இல்லை.

சேக்கிழார் வழக்கு:

''விளங்குபெருந் திருமுன்றில் மேவுதிருப்பணி செய்தே
உளங்கொள் திருவிருத்தங்கள் ஓங்குதிருக் குறுந்தொகைகள்
களங்கொள் திருநேரிசைகள் பலபாடிக் கைதொழுது
வளங்கொள் திருப்பதியதனில் பலநாள்கள் வைகினார்''

'திருநேரிசை' என்று சேக்கிழார் குறிப்பிடுவதையே, பிற்கால மரபு 'குறுந்தாண்டகம்' என்று குறித்துள்ளது.

{கூவிளம் / கருவிளம்} {புளிமா / தேமா} + தேமா +
{கூவிளம் / கருவிளம்} + {புளிமா / தேமா} + தேமா

என்பதே இவ்விலக்கிய வடிவத்தின் இலக்கணமாக உள்ளது. அப்பரடிகளின் தாண்டக வடிவம், தமிழ்ச் செய்யுள் இலக்கணத்தை அடியொற்றி அமைந்தது; வடமொழித் தண்டக அமைப்பை அடியொற்றி அமைந்ததன்று என்பது அறிஞர் கருத்து. (பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாம் பாகம், க. வெள்ளை வாரணர் பக், 330)

அப்பரடிகளின் திருநேரிசைத் தோற்றம்:

திருநேரிசைகள் அனைத்தும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களே ஆகும்; இவ்வாறு வரும் கட்டளையடி அமைப்பில், மூன்றாம் சீர் மாச்சீராக அமையாமல், ஓரசையாக நிற்கும் இடங்களில் ஓசை நீட்டி ஒழுங்கு செய்துகொள்ள வேண்டியுள்ளது; இவ் வேறுபாடு 27 திருப்பாடல்களில் மட்டுமே காணப்படுகின்றது; [நோக்குக: 218, 231, 238, 254, 257, 258, 334, 342, 360, 393, 411, 412, 420, 423, 425, 437, 461, 463, 479, 485, 487, 492, 499, 611, 660, 670,] இவற்றை ஒற்றளபெடை போல விரித்தல் விகாரமாக ஒற்றுச் சேர்த்துக் கொள்ளின் ஈரசை யாகி மாச்சீர் ஆகும். [பதிப்பு முறையில், 492 ஆம் பாடலில் மட்டும் ''கோவ ண(ம்) மும்'' என்ற ஓர் இடம் நீக்கலாகப் பிற அனைத்திலும் ஓரசையாகவே காட்டப் பட்டுள்ளன.—1941 சைவ சித்தாந்த மகா சமாசப் பதிப்புக் காண்க.]

அமைப்பு முறை:

இத்திரு நேரிசைகளாக அடிகளார் அருளியவை 550 திருப்பாட்டுக்கள்; 40 திருத்தலங்களில் இவை பாடப்பட்டுள்ளன; ['திருவதிகை' முதல் 'திருச் சேறை' இறுதியாகவும், பின்னர் 74, 75, 76, 77, 78, 79, ஆகிய பொதுப் பதிகங்களாகவும்.] இத் திருநேரிசைகளை அடிகளார் தில்லையிலேயே முதன் முதலாகப் பாடத் தொடங்கினர் என்பது குறிப்பிடத் தக்கது. திருப்புகலூர் வரை இவ்விலக்கிய வடிவத்தில் அடிகளார் திருவாக்கு தொடர்கிறது.

வழிகாட்டும் வடிவம்:

மிக அழகிய இத்திருநேரிசைகளில், உருவகம் சிறப்பிடம் பெறுகின்றது; அறுசீர் விருத்தங்களாகிய இவ்விலக்கிய வடிவத்தைப் பிற்காலத்து வந்த பெருங்கவிஞர் பலரும் கையாண்டு மகிழ்ந்தனர். சேக்கிழாரும், கம்பரும் இதனைப் பெரிதும் கைகொண்டுள்ளமை அறிஞர் உலகம் அறிந்ததே. 'குறுந்தாண்டகம்' இவ்வாறு பிற்கால இலக்கிய வளர்ச்சிக்கு வழிகாட்டுவதாக அமைந்துள்ளது எனலாம்.

தமிழைக் காவான் மனிதனாகான்!

புலவர் சா. பன்னீர்செல்வம், பட்டுக்கோட்டை.

பெண்ணாசை பெரிதென்பார் அறியார்; பெண்தான்
  பேரிளமைப் பெண்ணானால் திரும்பிப் பாரார்
மண்ணாசை பெரிதென்பார் அறியார்; மண்தான்
  மாற்றாருக் காட்பட்டு மதிப்பி ழக்கும்

பொன்னாசை பெரிதென்பார் அறியார்; பொன்தான்
  பொதியாகக் குவியுமெனில் மதிப்பே யில்லை
என்னாசை மொழியான தமிழ மிழ்தே
  எந்நாளும் எவ்வளவும் களிப்பே நல்கும்!

புறம்பேசிப் பொல்லாங்கு புரிவோன் றானும்
  பொருந்திமனத் துயர்களையும் நண்ப னாகான்
மறம்பேசி மனத்திலாண்மை யில்லா தானும்
  மங்கையரின் காதலிலே வெற்றி கொள்ளான்

திறம்பேசித் திருட்டுவழி செல்வன் றானும்
  செய்கின்ற பூசனையால் பக்த னாகான்!
அறம்பேசும் அருந்தமிழைக் காவா தானும்
  அற்றத்தை மறைக்கின்ற மனித னாகான்!

புதுவைப் பேச்சு வழக்குகள்

திரு. பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு)

நெட்டப்பாக்கம் என்ற கிராமத்தில் இராஜாளி என்ற பறவையை 'எடால்' என்று அழைப்பதை ஒரு பாமரன் வாயால் கேட்டேன். ஒரு புறாவை வல்லூறு அடித்துச் செல்லுவதைப் பார்த்த கிராமத்தான். "புறாவை எடால் அடித்துச் செல்வதைப் பாருங்கள்" என்று சொன்னான். தமிழ்நாட்டில் வல்லூறு, இராஜாளி, பைரி என்ற வழக்குகள் வழங்குகின்றன. எழால் என்ற பெயர் மிக அருமையாக, புதுச்சேரி மாநிலத்தில் வழங்குகிறது. எடால் என்ற பெயர் சங்க இலக்கியப் பெயராகும். ழகரம் எளிதில் டகரமாவது மொழியியலில் கண்டதாகும். ஏழு, ஏடு ஆவதையும், கோழி, கோடி ஆவதையும் தெலுங்கு மொழியில் காணலாம். அது போலவே எழால் என்ற பெயரே எடால் என்று மாறியது. நிழலறு தனந்தலை எழாலேறு குறித்த (அகம் 103) குடுமி எழாலொடு கொண்டு கிழக்கிழிய (பதிற்றுப்பத்து-36.) சிறுபுள்புறவொடு சிற்றெழால் சேறும் (திணைமொழி-16.) பிற்காலத்தில் இலக்கியம் கூட வழங்காது சங்கப்பாடல்களில் மட்டும் வழங்கிய "எழால்" என்ற பெயர் புதுவைப் பகுதியில் வழங்குவது மிகவும் வியப்புக்குரியதாகும்.

தொல்காப்பிய சொல்லதிகாரத்தில் (க: 357) 'கவ' என்ற உரிச் சொல்லின் பொருள் கூறப்பட்டுள்ளது. 'கவவு அகத்திடுமே' என்று அந்த சூத்திரம் கூறுகின்றது. இந்தச் சொல்லிற்கு எடுத்துக்காட்டாக 'காதலற் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமல்' என்று வரும் சிலப்பதிகார ((I, II வரியில் கூறப்பட்டுள்ளது, காதலன் காதலியை அகத்தில் இட்டு, கை நெகிழாமல் தழுவி என்ற பொருள்கொள்ள வேண்டும். மேசைகளில் இருக்கும் இழுத்துமூடும் சிறு பெட்டிகளை (Drawer) 'கவயம்' என்று புதுவை மாநிலத்தில் வழங்குவதைக் கேட்கலாம். இந்த வழக்கைப் பிற இடங்களில் கேட்பதரிது. பொருள்களை அகத்தே இடும் சிறு பெட்டியை, அமைப்பைக் கவயம் என்று அழைக்கும் பெயருக்குத் தொல்காப்பியர் கூறிய உரிச் சொல்லே அடிப்படை என்று தெரிகிறது. பொருள்களை அகத்திடுவது, கவவுவது, கவயம் என்று வழங்கப்படுகிறது. கவளம், கௌவி

என்ற சொற்களும் இதே அடிப்படையில் வழங்குபவை யாகும். சிறுவன் ஒருவனைக் 'கடிய வாடா' என்று கிராமத்தில் அழைப்பதைக் கேட்டிருக்கிறேன்;

''கடி என்கிளவி விரவே கூர்மை
காப்பே புதுமை விரைவே விளக்கம்''

என்று தொல்காப்பியம் கூறுகின்றது; தொல்காப்பியர் கூறிய விரைவுப் பொருளில் கடி என்ற சொல் புதுவை மாநிலத்தில் வழங்குவதைக் காண்கிறோம். புறநானூற்றில் (9) விரைவுப் பொருளில் இச்சொல் வழங்கியுள்ளது. சங்க நூல்களில் 'கடிய நெடுவேட்டுவன்' என்ற குறுநிலத்தலைவன் பெயரில் இதே விரைவுப்பொருள் இருப்பதைக் காணலாம்; சிறு பிள்ளைகள் விளையாடும் போது அழுகுணி, அழுங்குணி ஆட்டம் ஆடுவதாகப் பேசிக்கொள்வதைக் கவனித்திருக்க லாம். ஓர் ஆட்டத்தைக் கெடுக்கும்படியாக ஒருவன் ஆடினால் மற்றவர்கள் இவ்வாறு கூறி, குறை சொல்வார்கள்; சிறு பிள்ளைகளின் இந்தச் சொல் வழக்கு தொல்காப்பியர் கூறியுள்ள உரிச்சொல் வழக்கில் காணலாம்;

''அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்''
— தொல் : சொல் : 350

ஆட்டத்தில் கேடு தரும்படி ஆடுவதையே ஆட்டத்தைக் கெடுப்பதையே-அழுங்கல் ஆட்டம் என்று கூறுவர்; அதுவே அழுங்குணி, அழுகிணி என்று பேச்சு மொழியில் மாறிற்று. இந்த அழுங்கல் என்ற சொல் 'கேடு' என்ற பொருளில் சங்க நூல்களில் வழங்குவதைக் காணலாம்; மேலும் புதுவை மாநிலத்தில் கடற்கரையோரங்களில் மாறி மாறிப் புதியதாக மேடிட்டு உருவாகும் மணல் திட்டுகளை ''வம்பா'' என்றழைக் கின்றனர்; 'வம்பாவிலே வண்டி செல்ல முடியாது' 'வம்பாவில் சவுக்கு போடுவது நல்லது' என்று பேச்சு வழக்கில் சொல்வதைக் காணலாம். வம்பாவில் அமைந்த ஊரை ''வம்பாகீரைப்பாளையம்'' என்று அழைக்கின்றனர். 'வம்பு நிலையன்மை' என்று தொல்காப்பியர் (சொல் 327) கூறியுள்ளார். நிலையில்லாது மாறும் மணல் திட்டுகளை வம்பு என்று அழைப்பது மிகவும் பொருந்தமே; வம்பு என்ற சொல்லே கிராம மக்கள் வாயில் ''வம்பா'' என்று மாறியது;

வசையாகக் கூறும் வழக்குகளுள் புதுவை மாநிலத்தில் வழங்கும் ''தூமை'' என்ற வழக்கு தனிப்பட்டதாகும். இந்த வழக்கைப் பிற மாநிலங்களில் கேட்க முடியாது; பெரும்

கேடு விளைவிப்பவன் என்ற பொருளைச் சுட்டுவதற்கு இத் 'தூமை' என்ற சொல் பயன்படுகிறது. தூமம் என்ற சொல் தூம கேதுவைக் குறிக்கும். தூமகேது தோன்றினால் உல கிற்குப் பெருந்தீங்கு வருமென்ற நம்பிக்கையை, புறநானூறு (117) குறிப்பிடுகிறது. கம்பரும் "தூமகேது புவிக்கெனத் தோன்றிய'' என்று மந்தரையை வர்ணிக்கிறார். கம்பர் மந் தரையைக் கூறியதுபோல் புதுவை மாநிலத்திலும் வசை மொழியாக ''தூமை'' என்ற சொல் வழங்குகிறது. புதுவை மாநிலத்தில்காணப்படும்தனித்த பேச்சு வழக்குகளில் 'அலார்' என்ற சொல்வழக்கு ஆராயத்தக்கது. ஒரே 'அலாரா' இருக் கின்றது. 'அலரா' பண்ணுகிறான் என்ற பேச்சு வழக்குகள் வழங்குகின்றன. இந்த வழக்கின் பொருள் சங்க காலத்தில் வழங்கிய 'அலர் அறிவுறுத்தல்' என்ற வழக்கின் மரபின தாகும். புதுவையில் வழங்கும் பேச்சு வழக்கிலும் வெளிப் படையாகப் பேசப்படுதலையே, விளம்பரமாவதையே, ஆர வாரப்படும்படி செய்தலையே 'அலார்' என்று கூறுகின்றனர்.

சுவையான கிணற்றுநீரை 'காக்காய் தண்ணீர்' என்று கூறுவதைக் கேட்டு இருக்கிறேன். முதலில் இந்த வழக்கைக் கேட்டது மலைப்பாகத்தான் இருந்தது. பின்னர் பேசிப் பார்த்ததில் கால்காய் தண்ணீர் என்பதே காக்காய் தண்ணீர் என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. கால்காய் என்பது இளநீரைக் குறிக்கும். கால், கை வலிப்பை காக்காய் வலிப்பு என்று கூறுவது போல வும், கால், கை பிடிப்பதைக் காக்காய் பிடித்தல் என்று கூறு வது போலவும் கால்காய் தண்ணீர் காக்காய் தண்ணீராக மருவியது. இழிந்து என்னும் பேச்சுவழக்கு இறங்கி என்ற பொருளில் வழங்கி வருகிறது. இந்த இழிந்த என்ற பேச்சு வழக்காவது சங்க நூல்களில் (பதிற்றுப் பத்து 36) வழங்கு கிறது;

புதுவை மாநிலத்தில் கிணறு கட்டும் போது சூறாவளிக் கட்டையின் மேல் செங்கல் சுவரைக் கட்டி இழிச்சுவர் என்று கூறுகின்றனர். ''காவு தெங்கிட பெறுவதாகவும் துரவு கிணறு இழிக்த பெறுவதாகவும்'' என்று சேரமான் திருக் காட்டுப்பள்ளி சாசனம் கூறுகிறது. இறங்கி என்ற பொருளில் இழிந்து என்ற பேச்சுவழக்கு புதுவை மாநிலத்தில் பரவலாகக் காணப்படுகிறது.

காலாப்பட்டு கடற்கரையோரத்தில் அலைவாய்' என்று சில பகுதிகளைக் கூறுவதைக் கேட்டிருக்கிறேன் புகழ்மிக்க திருச்செந்தூர் 'அலைவாய்' என்று அழைக்கப்பட்டுள்ளது. பாண்டியரின் தலைநகரான அலைவாயில் இருந்து பிரித்துணரவே திருச்செந்தூரை 'நாமனூர் அலைவாய்" என்று கூறினர் பாண்டியருக்குத் தலைநகராகக் கபாடபுரம் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது கபாடம் என்பதற்கு வாயில் என்று பொருள். அலைவாய் என்ற பெயருடைய பாண்டியரின் தலைநகரை—கபாடபுரம் என்று வடமொழிப்படுத்தியது தெரிகின்றது. "அலைவாய்" என்ற பெயரே பாண்டியர் தலைநகரான மதுரைக்கு வழங்கியது ஆனால் அதைப் பிற்காலத்தில் ஆலைவாய் என்று மாற்றி அதற்கு ஒரு புராணக்கதையும் படைத்துவிட்டனர். காலாப்பட்டுக்கருகில் தொண்டி என்பது பேச்சு வழக்கில் 'ப' என்ற எழுத்தின் தலைகீழ் வடிவமான ஒரு பள்ளத்தைக் குறித்து வழங்குவதைக் கேட்டுள்ளேன், மூன்றுப்புறம் சுவருடைய பள்ளத்தை, கிடங்கை 'தொண்டி' என்று அழைக்கின்றனர். கடற்கரையில் இத்தகைய அமைப்பையுடைய ஆழமான பகுதியை உண்டாக்கி, படகுகள், கப்பல்கள் தங்கி நிற்கும் இடமாக அமைப்பதையே "தொண்டி" என்று அழைத்தனர். தொண்டி என்ற சங்ககாலத்துறைமுகப் பட்டினத்தின் பெயர் இதன் காரணமாகவே தோன்றியிருக்கலாம் தொண்டி என்பதற்கு நேரான ஆங்கிலச் சொல் (Whatr) ஆகும்.

புதுவை மாநிலத்தில் வழங்கும் ஒருசில பேச்சு வழக்குகளை மேலும் ஆராய்ந்தால் பல அரிய பழந்தமிழ்ச் சொற்கள் நமக்குக் கிடைக்கும்.

அமுதசுரபி, டிசம்பர் 90

புரம்: புரம்-உயர்ந்த மனை, அஃதுள்ள நகர். குடி, நகர், பதி முதலிய பிற சொற்களும் தனியில்லையும் ஊரையும் குறித்தல் காண்க. உயர்ந்த கட்டிடங்களுள் தலைமையானது கோபுரம். ஒ. நோ: கோநாய், அரசமரம், நாயகத்தூக்கம். புரம்-பரம்-மேல், பரம்-பரன் பரை.

—பாவாணர் (முதல் தாய்மொழி-பக். 67.)

டாக்டர் மு. வ. தமிழ் வாழ்க்கை

டாக்டர் இர. குழந்தைவேலு, தமிழ்ப் பேராசிரியா,
பூசாகோ கலை அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர்.

ஒரு கலைக் கழகம்

டாக்டர் மு. வரதராசனார் (25-4-1912—10-10-1974) ஒரு கலைக் கழகம்.[1] அவரைக் கலைக்கழகமாகத் தமிழ்ச் செம்மல் ஒருவர் கண்டார். அத் தமிழ்ச் செம்மல் திரு. வி. கலியாணசுந்தரனார் ஆவர் இவ்வாறு அவர் மதித்த மதிப்பில் காமஞ் செப்பல் இல்லை; கண்டது மொழிதலே இருந்தது.

முன்னாளில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில், டாக்டர் மு. வ. தமிழ்ப்பேராசிரியர்; சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர்; பின்னாளில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு இரண்டாவது துணைவேந்தர். அவரைக் குறித்து, அப்பல்கலைக் கழகத்து முதலாவது துணைவேந்தர் கலைக்கடல் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் குறிப்பிட்டது இங்கே நினைவிற்குக் கொண்டு வரத்தக்கது. அவர், "தமிழ் இலக்கியத்தின் அடிப்படைக் கருத்துக்களை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் எளிதில் விளக்கும் பேராசிரியர் எனப் பேர் பெற்றுள்ளார். படைப்பாற்றல் பெற்ற எழுத்தாளர், தமிழி உள்ள முற்கால இடைக்காலத் தற்கால இலக்கியங்களில் ஒரு சேரத் திளைக்கும் ஒரு சிலரில் இவரும் ஒருவர்" என்று எழுதினார்.[2]

இவ்வாறே அறிஞர் பலரும் பாராட்ட அவர் எழுத்தாற்றலோடு வாழ்ந்தார் அவரது எழுத்தாற்றலில் நின்ற தமிழாற்றல் பெரிதாகும். இது கல்வியில் சிறந்த தமிழ்நாடு அறிந்த உண்மை.

தமிழ் வாழ்க்கை

அவர் இயற்கையிடத்துப் பெரும்பற்றுக்கொண்டு வாழ்ந்தார். இந்தப் பற்றினைக் குறித்துத் தெளிவாக அறிதற்குத் திரு. வி. க. வரைந்த ஒரு கருத்துப் பகுதி இங்கு வேண்டும். அந்தப் பகுதி "கூட்டம் கூடுதற்கு முன்னர்க் காலையிலும்,

கூட்டம் முடிந்த பின்னர் மாலையிலும் வரதராஜனாரும் யானும் ஆற்றங்கரைக்குச் செல்வோம்; தோட்டங்கட்குப் போவோம்; இயற்கையை எண்ணுவோம்; பேசுவோம்; உண்போம். அவர் திருப்பத்தூரில் வதிந்தபோது இயற்கையோடியைந்த வாழ்வு அவரிடம் தானே தவழ்ந்தது. நண்பரது சென்னை வாழ்க்கை இயற்கையிலே செயற்கையைச் சேர்த்தது. அடிக்கடி நண்பரைச் சென்னையில் காண்பதில் எனக்கு இன்பம் உண்டாகிறது; அதே நேரத்தில் செயற்கையின் சேர்க்கை நினைவு தோன்றும் போது துன்பம் உண்டாகிறது. அன்பரும் சிற்சிலபோது வருந்துவது எனக்குத் தெரியும்" என்பதாகும்.[3]

இவ்வகையில் டாக்டர் மு. வ.வைக் குறித்த ஓர் ஆராய்ச்சி அறிமுகமாக அமைவது இது. இருவர் நட்போ இவ்வாறு தொடர்ந்து பழகப் பழகவே கற்கக் கற்க நூலின்பமாக இனித்து இணங்கிச் சிறந்தது. அதற்கு இயல்பாக இருவருக்கும் இருந்த இயற்கை ஈடுபாடும் துணை நின்றது என்பது இங்கு விளங்குகின்றது.

திரு. வி. க. செய்த ஆராய்ச்சி அறிமுகத்தோடு டாக்டர் மு. வ. சுட்டும் கருத்தொன்று ஒப்பவைத்து நினைத்தற்குரியதாகின்றது. டாக்டர் மு. வ. சுட்டும் கருத்து "சென்னை போன்ற நகரங்களில் அருமைக் குழந்தைகள் விழிக்கு எழுமுன் எழுந்து வீட்டை விட்டுப் புறப்பட்டு, குழந்தைகள் உறங்கியபின் திரும்ப வீடு சேர்ந்து களைத்து உண்டு உறங்கும் வாழ்க்கையில், இயற்கையைக் கண்டு உறவாட நேரம் ஏது? வாய்ப்பு ஏது? தப்பித் தவறிக் கடற்கரைக்கே சென்றாலும், கண்கள் காணும் காட்சிகளும் வேறு வேறே" என்பதாகும்.[4]

இந்த ஒப்பியல் நோக்கினால், திரு. வி. க. வெளியிட்ட ஆராய்ச்சி அறிமுகக் கருத்து ஒத்திருத்தல் தெளிவாகின்றது; உண்மையாதல் தெளிவாகின்றது.

இந்நோக்கோடு ஒரு நூலுக்குத் திரு. வி. க. தந்த ஓர் அணிந்துரையில், தோற்றுவாயின் பகுதி இங்கே இணைத்துக் காணத்தக்கது. அது "தமிழ் எது? மொழியா? அன்று; நாடா? அன்று. பின்னை எது? வாழ்க்கை. தமிழ் வாழ்க்கை இயற்கையோடியைந்து ஒழுகுவது. இயற்கையோடியைந்து ஒழுகுவார் எவராயினுமாக. அவர் தமிழ் வாழ்க்கையினரே ஆவர்" என்பதாகும்.[5] அச் சான்றோர் வரைந்து வைத்த ஒரு பகுதிக்கு, டாக்டர் மு. வ. வாழ்க்கை ஓர் எடுத்துக்

காட்டாகும் என்பது இங்கு ஏற்படுகின்றது. இப்பார்வை வழியில் அவர் தமிழ் வாழ்க்கையினராகின்றார். அவர்தம் வாழ்க்கை வழியாக, இத் தன்மையைத் தெளிவாக அறிந்து கொள்ளுதல் கூடும்.

நோக்கம்

டாக்டர் மு. வ. இயற்கையைக் கண்டார்; அக் காட்சியில் திளைத்தார். அவருக்கு இயற்கையோடு இயைந்து ஒழுகும் நோக்கம் இருந்தது. அந்நோக்கத்தோடு அவர் வாழ்ந்து காட்டினார். அவர் இயற்கையோடு இயைந்து நின்று ஒழுகத் தலைப்பட்ட ஒழுக்கம் பாராட்டுக்குரியது. அவரது தமிழாராய்ச்சிக்கு ஏற்ற துணையாக அஃது அமைந்தது. அவரது வாழ்க்கைக்கு அது பெருநலன் விளைத்தது. அதனால் தமிழ் நலம் பெற்றது. இம் முறையில் அவர்தம் வாழ்க்கை சிறந்தது. இவ் வாழ்க்கை வரன்முறையில் விளங்கும், அவர் தம் வாழ்க்கைச் செய்திகளில் சிலவற்றைத் தொகுத்து, ஒருவாறு ஒழுங்குபடுத்திக் காட்ட முற்படுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இயற்கைத் தளம்

ஊர் இயற்கை

டாக்டர் மு. வ. வின் இளமை நாட்களிலேயே அவரது வாழ்வில், இயற்கை இயைந்தது ஆதல் வேண்டும். ஊரின் இயற்கையால், அந்த இயைபேற்பட்டது ஆதலும் வேண்டும். அந்த ஊரே அவருக்குச் சேர்ந்த நலமெலாம் காட்டவல்லது. இயற்கை வளம் சிறந்த அந்தச் சூழல், இங்கே அறிதற்குரியது.

அவருக்குச் சொந்த ஊர் வேலம். அது சிற்றூர். அஃது ஆர்க்காட்டிலிருந்து ஐந்தாவது கல்லில் அமைந்தது. அது நீர்வளமுடையது. பசுமை இயற்கை அழகு விருந்தளித்த ஊர் அது. அந்நாளில் பாலாற்றை அது நுகர்ந்தது. அதனால் அது செழித்தது.

பாலாற்றுக்கு மைசூர் மாநிலத்தில் அன்று அணை ஒன்று எழுந்தது. அதனால் பாலாறும் பின்னாளில் வறண்டது. ஆர்க்காட்டைச் சூழ்ந்த சுற்றுப்பக்க இடங்களெல்லாம், நீர் வளத்தில் சுருங்கி நலம் குன்றின. வேலமும் நீர்வளத்தில் தணிந்து நின்றது. அவர்தம் இளமையில் கண்ட இயற்கை

வளமோ பொழில் பொலிவோ வேலத்தில் இந்நாளில் இல்லை. அது வற்றியது.

ஈரச் சுவடு

அந்நாளில் 'ஆனந்த விகடன்' என்ற கிழமை இதழில், அந்த ஊரைக் குறித்து டாக்டர் மு. வ. கட்டுரை ஒன்று எழுதினார், அக் கட்டுரையின் குறும்பகுதிகள் வருமாறு அமைந்துள்ளன:

"ஐம்பது ஆண்டுகளுக்கு முன் என் இளமையில் நான் கண்ட இயற்கை வளமும், பொலிவும் இப்போது இல்லை. பாலாற்றுக்கு மைசூர் மாநிலத்தில் அணை கட்டிய பிறகு, அது. வறண்ட ஆறு ஆகிவிட்டது; ஆர்க்காட்டைச் சூழ்ந்த இடங்களில் நீர்வளம் குன்றியது. எங்கள் ஊரான வேலமும் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது.

"ஆர்க்காட்டிலிருந்து ஐந்தாவது மைலில் சோளிங்கபுரம் போகும் சாலையில் அமைந்த கிராமம் அது. ஊரின் முகப்பிலேயே ஒரு நல்ல குளம் (ஊருணி) அமைந்து அழகான காட்சி தருகிறது. அதன் உயர்ந்த கரையின் மேட்டில் ஆலமரங்கள் பல சூழ்ந்து விளங்கும். குளத்திற்கும் ஊர்க்கும் இடையே நீரற்ற ஓடையும், பெரிய ஆலமரமும் உள்ளன. அந்த மரங்களே ஊர்ப் பெரியவர்களுக்கு அரசியல் அரங்கம்! இளைஞர்களுக்கு ஆடும் களம்; அரட்டை மன்றம். இவை எல்லாம் ஊர்க்கு மேற்கே உள்ளன... வடக்குப் பகுதியில் உள்ள தெருவில் எங்கள் வீட்டின் திண்ணைமேல் இருந்து பார்த்தால் வேலத்து மலை ஒரு மைல் தொலைவில் தெரியும். இளமையில் அந்த மலையின் உச்சிப் பகுதி மட்டுமே தெரியும். மலைக்கும், எங்கள் தெருவுக்கும் இடையே அவ்வளவு மரங்கள் அடர்ந்திருந்தன. இப்போது வீட்டிலிருந்து பார்த்தால் மலையின் முழு வடிவமும் தெரிகிறது. மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டுப் போயின.

"வேலத்து மலையில் இரண்டு சிகரங்கள் உள்ளன. ஒன்று சட்டக்கல் எனப்படும். மற்றொன்று கூசுமலை (கூர்ச்சுமலை) எனப்படும்."[6]

இவ்வாறு தொடர்ந்து அவர் எழுதிச் செல்லலாயினார். இவை அவரது சொந்த ஊரைச் சூழச் செறிந்த இயற்கைக் காட்சிகள்.

மேலே எடுத்துக் காட்டப்பெற்ற 'மரங்கள் வெட்டப் பட்டுப் போயின' என்பது கருதற்குரியது. இஃது அவருக்கு வாட்டம் தந்த குறிப்பின் ஈரச் சுவட்டினைக் காட்டுகின்றது. அந்த வாடிக் கிடந்த வாட்டத்தில், ஒப்பிடல் நுழைந்து நிலைத்தது. அந்த ஒப்பியற் பார்வை, அவரது நெஞ்சத்தில் வேரோடிக் கிடந்த இயற்கை ஈடுபாட்டினைத் தெளிவாக்குகின்றது.

பெருமித அழகு

அவ்வாறு முன்னாளில் அவருக்கு இயற்கை ஈடுபாடு இருந்தது. அது பின்னாளிலும் அவரது நெஞ்சத்தில் கிளைத்து விரிந்து நின்றது.

"ரயிலில் செல்லும்போதோ, பெங்களூர்ச் சாலையில் காரில் செல்லும் போதோ அந்த இரண்டு சிகரங்களின் பெருமிதமான அழகையும் நான் தவறாமல் பார்த்து மகிழ்வது உண்டு"[7]

அவரது உற்று நோக்கும் நோக்கு இங்கே வெளிப்படுகின்றது. அடுத்து அதனைக் கருத்து விளக்கத்திற்கு அவர் போற்றும் ஏற்றமும் இங்கு உணரத்தக்கது.

"ஊரிலிருந்து பார்க்கும்போது, சட்டக்கல் உயரம் குறைந்தது போல் தோன்றும். ஆனால் ஆர்க்காடு முதலான இடங்களிலிருந்து பார்த்தால் அதுதான் மற்றதைவிட உயரமானது என்ற உண்மை விளங்கும். ஒரு பொருளின் உண்மையான மதிப்பு அல்லது ஒருவரின் உண்மையான சிறப்பு நெருங்கிப் பழகுகின்றவர்களுக்குத் தெரிவதில்லை என்பதற்கு நான் அதை அடிக்கடி எடுத்துக்காட்டாகச் சொல்வது உண்டு."[8]

இதனால் தமிழறிஞராகச் சிறந்த அவருக்கு, அந்நோக்கு ஓர் இடைவழி நோக்கு அன்று என்பது தோன்றுகின்றது.

இயற்கை வாழ்க்கை

இவ்வாறு இயற்கையோடு இயைந்த போக்கில் அவர் வாழ்ந்தும் காட்டினார். இஃது உண்மை. இச் சிறப்பினைக் காணுதல் வேண்டும். அதற்கு இங்கு இடம் இருக்கின்றது:

''ஊர்க்கு மேற்கே உள்ள காட்டில் இன்னொரு பெரிய குளம் உள்ளது. அதன் நீர் தெளிவானது. (இப்போது கெடுத்து வருகின்றனர்) அரசங்குளம் என்பது அதன் பெயர். நீர், இளநீர் போல் இனிக்கும். காலையில் பல நாள் நான் நீந்திக் குளித்த பொய்கை அது.''[9]

''நான் விரும்பிக் குளித்து வந்த இடம் ஊர்க்கு வடக்கே மலையடிவாரத்தில் உள்ள பெரிய ஓடை என்னும் அருவியாகும். 'சல சல' என்ற ஒலியோடு வரும் அந்தக் குளிர்ந்த நீரில் குளித்து, பக்கத்தே ஓர் அத்தி மரத்தின் கீழே உள்ள பாறை மேல் அமர்ந்து நல்ல நூல்களைப் படிப்பது வழக்கம். என் வாழ்வில் பல நாள் மனம் அமைதியில் மூழ்கிய இடம் அது. பாடல்களை வாய்விட்டுப் பாடி மகிழ்ந்த இடம் அது.''[10]

அந்நாளில் குளத்திலும் அருவியிலும் அவர் குளித்து வந்தார். இங்கு நினைத்தற்குரியது அது.

இயற்கைச் சூழலில் பழகியவர் அவர்; வாழ்ந்தவர் அவர். ஆதலால் அவர் இயற்கையைத் தம் பழக்கவழக்கத்தாலும் எதிர்த்து வாழ முற்பட்டாரல்லர். அவர் குளியலுக்கு வெந்நீரைத் தள்ளினார். தண்ணீரைக் குளியலுக்கு அவர் கொள்வது என்பது இயற்கையோடு இயைந்ததாகும்; பொருந்தியதாகும். இயற்கையோடு இயைந்த அவர்தம் வாழ்க்கை இது.

ஒருவருக்கு வாழ்க்கையில், சில வகைகளில், நெருக்கோ பரபரப்போ இவற்றினும் வேறோ இருத்தல் கூடும். அப்போது அவருக்கு மனநிலை சிதைவது இயல்பெனல் வேண்டும். அத்தகு நிலையில், காமத்திலோ களியாட்டத்திலோ சிலர் அமைதியைத் தேடுதற்கு முயலுதல் உண்டு. அவரே இயற்கையோடு ஒன்றாத வாழ்க்கையினர். ஆயினும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையினர் தமக்கு ஒருவேளை அமைதி குலைந்தால், அவ்வமைதி பிறத்தற்கு, இயற்கைச் சூழலை நாடுவது இயற்கை. டாக்டர் மு. வ. வாழ்க்கை முறையால் இஃது இங்கே உறுதியாகின்றது.

குறிப்புக்கள் :

1. கலியாணசுந்தரனார், திரு. வி., 'அணிந்துரை', 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' (ஆசிரியர் : வரதராசனார், டாக்டர் மு.). பாரி நிலையம், சென்னை, 1955, பக். 11.

2. மீனாட்சிசுந்தரனார், தெ. பொ., 'முன்னுரை', 'தமிழ் இலக்கிய வரலாறு', (ஆசிரியர் ; வரதராசன், மு.,) சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1978.

3. கலியாணசுந்தரனார், திரு. வி., 'திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்', கழக வெளியீடு, சென்னை, 1969, பக். 84.

4. வரதராசனார், டாக்டர் மு., 'இயற்கையின் உறவு', 'இலக்கியக் காட்சிகள்', பாரி நிலையம், சென்னை, 1968, பக். 16.

5. 'திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்' பக். 125.

6, 7, 8, 9, 10. வரதராசனார், டாக்டர் மு., 'வேலம்', 'ஆனந்த விகடன்', சென்னை, 3-8-1969, பக். 24-26.

(தொடரும்)

கருதும் மாந்தன் : மாந்தரை மற்ற வுயிரிகளினின்று வேறுபடுத்திக் காட்டுவது மன்னுந் திறனாகிய பகுத்தறிவே. இயங்கும் உயிரிகட்கெல்லாம் கருதுந் திறமிருப்பினும், அது மாந்தனிடத்திற்போல் மற்ற வுயிரிகளிடத்தில் வளர்ச்சியடைய வில்லை. ''மக்கள் தாமே ஆறறி வுயிரே'' என்றார் தொல்காப்பியர் (1532). பொருள்களை உயர்திணை அஃறிணை என இலக்கண நூலார் இரு பகுப்பாகப் பகுத்ததும், அங்ஙனம் பகுத்தற்கேற்ப முன்னரே பொதுமக்கள் அவற்றின் வினைகளைக் குறிக்கும் சொற்களை வெவ்வேறு விகுதி கொடுத்துக் கூறிவந்ததும், அவற்றின் பகுத்தறி வுண்மையின்மை பற்றியே. மன்னுந்திறம் சிறந்திருத்தல் பற்றியே மாந்தன் மன் எனப்பட்டான்.

—பாவாணர் (முதல் தாய்மொழி, பக். 189)

தொல்காப்பியம்—தமிழாக்கமா?

தெ. முருகசாமி, முதல்வர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி.

வடமொழி இலக்கணத்தின் தமிழாக்கம் தொல்காப்பியம் என்று கை நடுக்கமின்றி எழுதிவரும் அவல நிலை இன்று தமிழகத்தில் உருவாகி உள்ளது "துஞ்சுபுலி இடறிய சிதடன் போல" என்ற புறநானூற்றுத் தொடரை (73) அறியாதார் மொழிவழியான எழுத்துப் போர் ஒன்றை மறைமுகமாகத் தொடங்கியுள்ளதாகவே தெரிகிறது. எது எப்படியிருப்பினும் தமிழ்மொழிவழிச் சிந்தனை உடையோர் இப்புண்ணுக்குப் புனுகு போடாமல் அறுவை மருத்துவம் செய்யவே விழைவர் என்ற அடிப்படையில் எழுந்ததே இக் கட்டுரை.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரப் பகுப்புகளை உடையது. எழுத்தாலாவது சொல், சொல் உணர்த்துவது பொருள் என்ற அளவில் மட்டும் இப்பகுப்புகள் பொருளைத் தருவதில்லை. வாழ்க்கையே ஓர் இலக்கண வரையறைக்கு உட்பட்டது என்ற நீள நினைந்த ஆழமான சிந்தனையில் சுட்டப்பட்ட குறியீடே எழுத்து, சொல் பொருளாம் என்பதைத் தமிழிலக்கணம் உணர்ந்தார் உணர்வர்.

மொழியப்படுவதால் மொழி, சொல்லப்படுவதால் சொல் என்ற நிலையில் சிந்தனையால் பல்கிப் பெருகிய மொழிக் கூறு உயிர், மெய், உயிர்மெய் என்ற எழுத்துக்களாய்த் தனித்தும் சேர்ந்தும் இயங்குகையில் "தமிழர் தம் வாழ்க்கை" மொழியோடு ஒட்டியதாகின்றது. உயிர் தனித்தியங்கும். மெய் உயிரோடன்றி யியங்காதென்பது மொழிக்கு மட்டும் விதித்த விதியன்று. அஃதே வாழ்வியலிலிருந்து கண்டறிந்த விதியாகும். எனவேதான் எழுத்துக்கும் பேச்சுக்கும் இலக்கணம் கண்ட உயர்தனிச் செம்மொழிகளுள் தமிழ் ஒன்றே வாழ்வியலோடு ஒட்டிய பொருள் இலக்கணம் கண்டது. இந்த அடிப்படையில் 'வாழ்வே இலக்கணம், இலக்கணமே வாழ்வு' என்பதைப் பழந்தமிழ் நூல்களெல்லாம் பன்னிப் பன்னிப்பேசின. எனவே வாழ்க்கையோடியைந்த தமிழர்களின்

தொல்காப்பியம் போல் வடமொழி இலக்கணம் அமைந்துள்ளதோ?

தொல்காப்பியம் தமிழ்மொழிக்கே இலக்கணம் கூற வந்த ஓர் அரிய நூல் என்பதைப் பல அகச் சான்றுகளால் நிறுவலாம். "எழுத்தெனப் படுப அகரம் முதல் னகர இறுவாய் முப்பஃதென்ப" என்ற முதல் நூற்பாவில் தமிழின் முதல் எழுத்தொலி அகரம் என்றும் இறுதி எழுத்தொலி னகரம் என்றும் சுட்டப்பட்டுள்ளது. அகரம் எல்லா மொழிக்கும் முதல் ஒலியாக இருக்கலாம். ஆனால் னகரம் எல்லா மொழிக்கும் இறுதியாவதில்லை. இந்த உண்மையை நச்சினார்க்கினியர் தம் உரையில் "தமிழ் எழுத்து என்பது அறிவித்தற்கு னகரத்தை இறுதியில் கூறினார்" எனத் தொல்காப்பியரைச் சிறப்பிப்பதன் மூலம் உறுதிப்படுத்துகிறார்.

மேலும் அகர ஒலிதான் எல்லா மொழிக்கும் மூல ஒலி என்று முதலில் வரையறுத்த பெருமை தமிழிலக்கணத்திற்கே உண்டு. "அஆ ஆயிரண்டும் அங்காந் தியலும்" என்கிறது தொல்காப்பியம். அங்காத்தல்—வாயைத் திறந்தல், வாயைத் திறந்த மாத்திரத்தில் தமிழ் நாட்டார்க்கு மட்டும் அகர ஒலி எழுவதில்லை. எந்நாட்டவர்க்கும் அவ்வொலியே முதல் ஒலி என்ற அறிவியல் சார்ந்த மொழிப் பார்வையைத் தொல்காப்பியம் போல் வடமொழி இலக்கணம் சுட்டுகிறதோ?

தமிழில் ர, ழ என்ற எழுத்திரண்டும் குறிலுக்குப் பக்கத்தில் வாரா. ஏர், ஏழ் என்பதாக நெடிலோடேதான் வரும் இயல்பின. அதனால்தான் "அர்ச்சனை" தமிழ் ஆவதில்லை. இதனை உணர்த்தும் "ரகார ழகாரம் குற்றொற் றாகா" என்ற தொல்காப்பிய இலக்கணம் தமிழ் மக்களின் மொழியியல்பைத் தேர்ந்து தெளிந்த செந்நூல் என்பதை உணர்த்துகின்ற தன்றோ!

சொல்லதிகாரத்தின் தொடக்கம் கிளவியாக்கம். கிளவி-சொல், ஆக்கம்—ஆக்குவது சொற்களை ஆக்கிக்கொள்வது என்ற பொருளில் சொல் பல்கிப் பெருகும் நிலையை உணர்த்தும் ஓரியல்தான் கிளவியாக்கம். எழுத்தாலாவது சொல், சொல்லாலாவது சொற்றொடர், சொல்லுக்குரிய இலக்கணம் கூறிய பிறகே சொற்றொடர்க்கு இலக்கணம் கூற வேண்டும். ஆனால் தொல்காப்பியர் சொற்றொடர் இலக்கணத்தைக் கிளவியாக்கமாக முன்னர் கூறிச் [illegible]

191729

வினை, இடை, உரிகளுக்குத் தனித்தனியே இலக்கணம் கூறுகிறார்.

மொழியியல் வளர்ந்துள்ள இற்றைய நாள் மொழியியல் வல்லுநர் யாவரும் தொல்காப்பியச் சொல்லதிகார இயல்களின் வைப்பு முறையில் கிளவியாக்கத்தை முதலில் வைத்ததை வியப்பினும் வியப்பாகப் போற்றுகின்றனர். சொற்றொடர்களின் ஒழுங்கிலிருந்துதான் தனித் தனியான சொற்களுக்குரிய இலக்கணத்தைப் புரிந்துகொள்ள முடியும் என்பது மொழியியல் அறிஞர்களின் அரிய கண்டுபிடிப்பு. இதனைத் தொல்காப்பியர் மூவாயிரம் ஆண்டுக்கு முன்பே கண்டறிந்து கூறினார் எனில் கிளவியாக்கத்தின் பொருளையும் அதன் வைப்பு முறை முதன்மையையும் பாராட்டாமல் இருக்க ஒல்லுமோ! ஒரியலின் பெயரனவிலேயே இத்தகு மொழிப் பெருமையை வடமொழி இலக்கணத்தில் சார்த்திக் கூற வாய்ப்புண்டோ?

தமிழ் நூற் பொருள்களை வரையறை வகையில் பேசும் சிலா தமிழில் காதலைத் தவிர வேறு என்ன இருக்கிறது என வாய் கூசாமல் கூறுகின்றனர். மானுட வாழ்வியலுக்குக் காதல்தான் அடிப்படை. இப் பேருண்மையை இலக்கணமாக வரையறுத்தவர் தொல்காப்பியர்.

> ''எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
> தானமர்ந்து வருஉம் மேவற் றாகும்''

என்ற பொருளதிகார நூற்பா மானுட இயலையும் தாண்டிய மன்னுயிர்க் கோட்பாட்டை ஆழமாக வரையறுக்கின்றது. காதல் உணர்வற்ற மலட்டுத் தன்மை மன்னுலகை மலர்த்த முடியாது. ஆனால் காதல் என்பதை வரையறையற்ற காட்டாறாகக் கொள்ளத் தமிழிலக்கணம் ஒருக்காலும் ஒருப்படவில்லை.

நல்ல இளமைப் பருவம், காதலைத் துய்த்துணரத் துடிக்கும் தொய்வில்லா இளமை அது. அப் பருவத்தில் வாழ்க்கைக்கு வருவாய் தேடக் காதல் மனையாளைப் பிரிய நேருகிறது. அவன் என்ன செய்வான்? அவள்தான் என்ன செய்ய முடியும், ''காதலா? கடமையா?'' எதைப் பணி கொடுப்பது? இதன் பரத்ததோ பொருள் தேடல் இன்பம் எனக் காதலை நெருக்கிறது அவன் உள்ளம். மறுகணமே 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' எனத் தேர்ந்து

தெளிகிறான். ஊஞ்சலாடும் இளமை நில்லாதே என மீண்டும் மறுகுகிறான். ''அறம், பொருள் இன்பம் என்ற மூன்றில் நடுவணது எய்த இருதலையும் எய்தும்'' எனக் கூறுகிறது அவன் உள்ளம்.

இப்படித் தேய்புரி பழங்கயிறாகும் அவன் நெஞ்சில் இறுதியாக ஓர் உறுதி பிறக்கிறது. ''வாழும் வாழ்க்கை பொருளுடையது; பொருளான வாழ்க்கையைச் செல்வமாகிய பொருளால்தான் பிறங்கச் செய்ய முடியும்; வைரத்தை வைரத்தால் அறுத்தாற் போலப் பொருள் தேடலால்தான் வாழ்வைப் பொருளுடைய தாக்க முடியும்'' என்ற நம்பிக்கையின் வீறு பொங்கித் ததும்பக் காதலைத் தள்ளி வைத்து விட்டுப் பொருள் தேடப் புறப்படும் புடம் போட்ட மானுட உணர்வைத் தமிழ்ப் பண்பாட்டின் பிழிவாகத் தொல்காப்பியத்தில் அன்றி வேறு எங்கே காணமுடியும்?

> நானது சின்மையும் இளமையது அருமையும்
> தானாண் பக்கமும் தகுதியது அமைதியும்
> இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்
> அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்
> ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்

என்ற இப்பகுதி 'ஒன்றாத்தமரினும் பருவத்தும் சுரத்தும்' எனத் தொடங்கும் அகத்திணை நூற்பாவின் இடையில் பொருள் தேடப் புறப்படும் தலைவனின் மனநிலைக்கு இலக்கணம் வரையறுக்கின்ற ஓர் அரிய இடமாகும். அலையிடைப் பட்ட துரும்பானது அலைந்து திரிந்து இறுதியில் கரை ஒதுங்குதல் போல் எதிலும் ஒன்றி முடிவுகாணாத உள்ளம் முடிவாகப் ''பொருள் தேடுவதுதான் சிறப்பு'' எனத் தெளியும்போது காதலைத் துய்க்க வேண்டிய பருவத்தில் துய்க்காமல் அதைப் பணயம் வைக்கும் மனநிலையை என்னென்பது!

இந் நிலையில் அவள் நிலைதான் என்ன? அவளுக்குக் கொஞ்சும் இளமை இல்லையோ? அவன் பிரிவை அவளும் ஏற்க ஒல்லுமோ? என்றெல்லாம் எண்ணிய தொல்காப்பியர் அவன் மனநிலைதான் அவளுக்கும் என்பதாக இலக்கணம் சொன்னார். ''அவன் பிரிவில் அவள் ஆற்றியிருக்க வேண்டும்'' என்பதே அவ்விலக்கண வரையறை. பிரிந்த தலைவன் வரும் வரை மனம் தேறியிருத்தல் என்பதுவே ஆற்றியிருத்தலாம்

(தொடரும்)

செய்திகள்

சாத்தூர் சேகரன் பாராட்டு விழா

பன்மொழியறிஞரும் மொழியாராய்ச்சியாளருமான சாத்தூர் சேகரன் அவர்கள் தமிழ்மொழி—பிற மொழி ஒப்பாய்வுக்காக மேலை நாடுகட்கு மூன்று திங்கள் பயணம் செய்து மீண்டமைக்காகப் பாராட்டு விழா 11-1-92 மாலை சென்னை பாவாணர் மாவட்ட மைய நூலகத்தில் தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது. விழாவிற்குச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர். பொற்கோ தலைமை தாங்கினார். டாக்டர். இரா. மதிவாணன், திரு. இரா. முத்துக்குமாரசாமி ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

தமிழ்மொழியிலுள்ள சொற்கள் பிற உலக மொழிகள் அனைத்திலும் இடம் பெற்றுள்ளதை ஆய்வு செய்வதற்காக ஐரோப்பிய நாடுகள் பதின்மூன்றுக்குச் சென்று மீண்ட பயண அனுபவத்தைத் திரு சாத்தூர் சேகரன் விரிவாக எடுத்துக் கூறினார். ஐரோப்பிய மொழிகள் அனைத்திலும் தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளதைச் சான்று காட்டி விளக்கினார். அங்குள்ள மொழிப் பேராசிரியர்களையும் அறிஞர்களையும் கண்டு பேசியுள்ளார். குறிப்பாக இலண்டன், பிரான்சு, ஜெர்மனி, துருக்கி, நெதர்லாண்டசு போன்ற பல நாடுகட்குச் சென்றுள்ளார். மிகக் குறுகிய காலப் பயணமாகவும் பல நாடுகளைப் பார்க்க வேண்டியதிருந்தமையாலும் ஒவ்வொரு நாட்டிலும் குறைந்த நாட்களே தங்க நேர்ந்தது என்றார். இப்பயணத்திற்குப் பேருதவியாகவிருந்த தொழிற்செம்மல் வள்ளல். டாக்டர். நா. மகாலிங்கம் அவர்களை நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

சான்றாகப் பிரெஞ்சுமொழியில் le, la என்பன ஆண், பெண் பால் பிரிவைக் குறிக்கப் பயன்படுவதைக் காட்டி அவை ஏன் அப்பொருளைக் குறிக்கின்றன என்று பிரெஞ்சு மக்களைக் கேட்டபோது யாருக்கும் தெரியவில்லை என்றார். தமிழில் 'ஏலே' 'ஏளா' என்பது நெல்லை மாவட்டத்தில் ஆண் பெண் பாலரை அழைக்க விளிச்சொற்களாகப் பயன்படுவதாகக் கூறி அவையே முதல் கெட்டு லே, ளா என்று பிரெஞ்சில் வழங்குகின்றன என்று கூறினார். இதுபோல் பல சான்றுகள் கூறி,

தமிழுக்கும் பிற உலக மொழிகளுக்கும் உள்ள தொடர்பை விளக்கிப் பேசினார்.

நெஞ்சு பொறுக்குதில்லை

அன்பும் பெருமையுமிகு ஆன்மநேய ஒருமைப்பாடுடைய தமிழ் நல்லோர்களே! நனி வணக்கம் பல!

கருநாடக மாநிலத் தமிழ் மக்கள்மீது கன்னட வெறியர்களின் கட்டவிழ்த்து விட்ட வன்செயல்களை நன்கறிவீர்.

தென்னகத்து வரலாற்றில் இதுவரையில் நிகழாத தாக்குதல்கள் தற்பொழுது தமிழர்மீது நிகழ்ந்துள்ளது. மனத்தால் நினைக்கவோ செவியால் கேட்கவோ கண்ணால் காணவோ வாயால் சொல்லவோ முடியாத வன்முறைகள்!

தண்டமிழ்த் தாய்க்குலத்தின்மீது வெறியர்கள் நிகழ்த்திய கொடுமை நெஞ்சை உருக்கச் செய்கிறது. தாய்மார்களின் தாலிகள் அறுக்கப்பட்டன. தங்கையரின் கற்பு அழிக்கப்பட்டது.

இது வரையில் கருநாடக மாநிலத்தில் இக் கொடுமைகளை எதிர்த்து எவரும் குரல் கொடுக்கவில்லை. காரணியம் அச்சமே. நிகழ்ந்து முடிந்த—மேலும் நிகழ்ந்து வருகின்ற வரப்போகின்ற கேடுகளை நினைந்து இரவில் உறக்கமின்றி இருந்து வருகின்றோம். தமிழகத்திலுள்ள தாங்கள்தாம் குரல் கொடுக்க வேண்டும்.

30 ஆண்டுகளாக ஒரு முரடன் தமிழர்களை எள்ளி ஏளனம் செய்வதுடன், கூலிகள், வந்தேறிகள் என்றெல்லாம் நம்மினத்தைப் பழித்துக் கன்னடர் தமிழர் உறவைக் கெடுத்து வருகின்றான். அவனை ஏனென்று கேட்க எவருமில்லை. தமிழர்கள் கையாலாகாதவர்கள் என்று நினைந்து சில வெறியர்கள் பெங்களூரில் என்ன நடந்தாலும் தமிழர்களைத் தாக்குவதைக் குறியாகக் கொண்டுள்ளனர். கருநாடகத்தின் வளர்ச்சிக்குக் காரணமே தமிழர்கள்தாம் என்று ஆங்கிலேயரின் கெசட்டியர் கூறுகிறது. அவைகளை எல்லாம் படித்து அறியும் திறன் அவர்களுக்கில்லை. அடித்துத் துரத்துவதுதான் அவர்களின் அறிவாகவுள்ளது. காழ்ப்பும் உவர்ப்பும் கொண்டு தமிழர்களை மட்டும் பழிப்பதற்கும்

மிரட்டுவதற்கும் காரணியம் நம்மிடையே ஒற்றுமைக் குறைவு என்பதுதான்.

அன்புடையோர்களே! இங்குள்ள தமிழர்கள் அமைதியாக வாழ வேண்டுமெனின் அங்குள்ள தமிழர்கள் வலுவான குரலெழுப்புவதுடன் செய்தித்தாள்களும் தலையங்கங்கள் எழுதுதல் வேண்டும். குடியரசுத் தலைவருக்கும் தலைமை அமைச்சருக்கும் சரியான தகவல்கள் அனுப்பப்படல் வேண்டும். உரிமைக் குரல் நாடெங்கும் நமக்காக எழல் வேண்டும்.

மொழிவழி மாநிலமாகப் பிரிந்துள்ளபடி அம் மொழி மக்கள் அந்தந்த மாநிலங்களுக்கே சென்றுவிட சட்டம் இயற்றி, பரிமாற்றம் செய்துகொள்ளலாம். ஆயின் இஃது நிகழக் கூடியதா? இங்குள்ள நிலை அப்படித்தான் ஆகும்போல் தோற்றுகிறது. 18, 20 அகவைச் சிறுவர்களுக்கு 60, 100 என பணந்தந்து ஏவி நாட்டையே பாழாக்கி வருகின்றனர். மேலும் தொடரும். விவரம் எழுதுவம். முகவரியும் அறிவிப்பேம். நன்றி. ஆவன செய்க.

பின் குறிப்பு: காடு வெட்டிக் களந்திருத்தி, காடுமேடுகளைச் சமப்படுத்திப் பல்லாயிரம் அடிகளின் கீழ் சென்று பொன்னெடுத்தும் தேயிலை காப்பித் தோட்டங்களில் கடுமையாக உழைத்தும் தொழில்களைப் பெருக்கியும் கட்டிடங்கள் எழுப்பியும் காலங்காலமாய் உழைத்துவரும் கருநாடக மாநிலத் தமிழர்களுக்கு இந் நிலை?

மாந்தநேயன்

தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் கருத்தரங்கம்

ஆராய்ச்சிப் பேரறிஞர் தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம் பண்டாரத்தார் நூற்றாண்டு விழாக் குழுவினரால் சீருடனும் சிறப்புடனும் 4-1-92 சனிக்கிழமையன்று குடந்தை அரசு மகளிர் கல்லூரியில் நடத்தப் பெற்றது.

இறை வணக்கத்தினைப் பேராசிரியர் சிவ. திருச்சிற்றம்பலம் அவர்கள் பாடினார். நூற்றாண்டு விழாக்குழு அமைப்பாளர் திருமதி. பானுமதி சத்தியமூர்த்தி அவர்கள் வரவேற்புரையாற்ற, பேராசிரியர் இரா. வேங்கடாசலனார் மாண்புமிகு தமிழக முதல்வர் உள்ளிட்ட பல்வேறு பெருமக்களின் வாழ்த்துச் செய்திகளைப் படித்தார்.

கல்லூரி முதல்வர் பேராசிரியர் சித்ரா வைத்யநாதன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்த, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் பொன். கோதண்டராமன் அவர்கள் பண்டாரத்தார் பணிகளின் சிறப்புகளைப் புகழ்ந்துரைத்துச் சிறப்புரையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் ஏ. சுப்பையன் அவர்கள் அறிஞரின் வரலாற்றுப் பணிகளை விளக்கினார்.

பண்டாரத்தாரின் திருவுருவப் படத்தை விருத்தாசலம் அரசு கல்லூரி முன்னாள் முதல்வர் மேஜர் வா. இராமகிருட்டினன் திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றினார். பேராசிரியர் த. கோதண்டபாணி நன்றியுரை கூற முதலாம் அமர்வு இனிது முடிவுற்றது.

கருத்தரங்கின் இரண்டாம் அமர்விற்குத் தமிழ்ப் பல்கலைக் கழக மொழிப்—புலத் தலைவர் முனைவர் சோ. ந. கந்தசாமி தலைமையேற்க, முனைவர் பி. தங்கவேலு வரவேற்புரையாற்றினார். பேராசிரியர் இரா. சுந்தரமூர்த்தி அவர்கள் 'பண்டாரத்தாரின் இலக்கியப் பணி' குறித்தும், பேராசிரியர் மருத. சுந்தரமூர்த்தி அவர்கள் 'பண்டாரத்தாரின் இலக்கணப் பணி' குறித்தும், திருமதி பானுமதி சத்தியமூர்த்தி அவர்கள் 'சம காலத்து அறிஞர்கள் பார்வையில் பண்டாரத்தார்' என்னும் பொருள் குறித்தும் ஆய்வுரை வழங்கினர்.

மதியம் உணவுக்குப் பின்னரான மூன்றாம் அமர்வில் அறிஞர் திரு. என். சேதுராமன் அவர்கள் தலைமை தாங்க, கல்வெட்டுப் பேரறிஞர் செ. இராசு அவர்கள் 'பண்டாரத்தாரின் கல்வெட்டுப் பணி' பற்றி எடுத்துரைக்க; குடவாயில் பாலசுப்பிரமணியம் அவர்கள் பிற்காலச் சோழர் வரலாறு பற்றி ஆய்வுப் பார்வையில் விளக்கினார். பேராசிரியர் முனைவர் ஜி. சுப்பராயலு அவர்கள் 'பண்டாரத்தாரின் பாண்டியர் வரலாறு' பற்றிச் சிறப்புரையாற்றினார்.

கருத்தரங்கின் நான்காம் அமர்வு திருவையாறு அரசர் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். தங்கமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஆறு. அழகப்பன்

சிறப்புரை ஆற்றினார். அவருக்கு நன்றி தெரிவித்துப் பேசிய திருமதி பானுமதி சத்தியமூர்த்தி பண்டாரத்தாரின் நூல்கள் அனைத்தையும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மறு பதிப்பாக வெளியிடுவதற்குப் பேராசிரியர் அழகப்பன் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்தார்.

தொடர்ந்து பேராசிரியர் சிவ. திருச்சிற்றம்பலம் 'பண்டாரத்தாரின் சமயப் பணி' குறித்தும் திரு. இரா பாஸ்கரன் 'பண்டாரத்தாரின் இலக்கியப் புலமை' குறித்தும், பேராசிரியர் முனைவர் அ. ம. சத்தியமூர்த்தி, 'பண்டாரத்தாரின் ஆய்வுக் கட்டுரைகள்' பற்றியும் ஆய்வுரை நிகழ்த்தினர்.

பண்டாரத்தாரின் வழித்தோன்றல் பேராசிரியர் ச. திருஞானசம்பந்தம் அவர்களும், அவர்களின் வழித்தோன்றல்களும் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். முனைவர் அ. ம. சத்தியமூர்த்தி அவர்கள் நன்றியுரை கூறக் கருத்தரங்கம் இனிது நிறைவுற்றது.

பல்கலைக் கழக, கல்லூரிப் பேராசிரியர்களும், வரலாற்று அறிஞர்களும், தமிழ்ச் சான்றோர்களும், தமிழ் அன்பர்களும் பெருவாரியாகப் பங்கேற்றுக் கருத்தரங்கைச் சிறப்பித்தனர்.

கல்லூரி மாணவர்க்குக் கட்டுரைப் போட்டி திருநெல்வேலித் தனித்தமிழ் இலக்கியக் கழக ஏற்பாடு

நெல்லைத் தனித்தமிழ் இலக்கியக் கழகம் கடந்த இருபத்தாறு ஆண்டுகளாகத் தமிழகக் கல்லூரி மாணவர்க்காக அறுபது பக்க ஆராய்ச்சிக் கட்டுரைப் போட்டி நடத்தி, கொடைவள்ளல் த. பி. சொ. அரிராம்சேட்டு நினைவுச் சுழற்கோப்பை ஐயாயிரம் வெண்பொற் காசுகள் மதிப்புடையது முதற் பரிசுக்குரிய எழுத்தோவியம் எழுதும் மாணவர் படிக்கும் கல்லூரிக்கு வழங்கப்படும்.

கட்டுரைப் போட்டி: "முதறிஞர் வ. சுப. மாணிக்கம் அவர்களின் தமிழ்ப் பணி" என்னும் பொருள் குறித்து அறுபது

பக்க அளவில் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் மாணவமணிகள் தங்கள் கல்லூரி முதல்வர் அல்லது தமிழ்ப் பேராசிரியர் கையொப்பத்துடன் 29—2—92 சனிக்கிழமைக்குள் பேராசிரியர் பா. வளன் அரசு, தலைவர், தனித்தமிழ் இலக்கியக் கழகம், 1-அ, நெல்லை நாயனார் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். பேராசிரியர் வ. சுப. மாணிக்கம் காரைக்குடி அழகப்பர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகவும் முதல்வராகவும் விளங்கியவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராகவும் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவும் திகழ்ந்தவர். காரைக்குடித் தமிழ்ச் சங்கத் தலைவராகவும், தமிழகப் புலவர் குழுவின் தலைவராகவும், தமிழ்வழிக் கல்வி இயக்கத்தின் நெறியாளராகவும் தொண்டாற்றியவர். அன்னார் எழுத்தாலும் பேச்சாலும் செயலாலும் தண்டமிழுக்குத் தொண்டுகள் பல புரிந்துள்ளார். அன்னாருடைய அரும்பெரும் பணிகள் பற்றிய ஆய்வுக் கட்டுரை எழுத மணிவாசகர் நூலக வெளியீடுகள் துணை புரியும்.

பரிசுகள்: முதற்பரிசாக ஈராயிரம் வெண்பொற் காசுகள் மதிப்புள்ள தங்கப் பதக்கமும் ஐயாயிரம் வெண்பொற் காசுகள் மதிப்புள்ள வெள்ளிச் சுழற்கோப்பையும் வழங்கப் படும். இரண்டாவது மூன்றாவது பரிசுகளாக இருநூறு, ஒருநூறு வெண்பொற்காசுகள் மதிப்புள்ள தமிழ் நூல்கள் வழங்கப்படும். நெல்லையில் 28—3—92 சனிக்கிழமை நிகழும் மாணிக்கனார் இலக்கிய விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

டாக்டர் தாயம்மாள் அறவாணன் நியமனம்

அன்னைத் தெரேசா மகளிர் பல்கலைக் கழகத்தில் கல்வி தொடர்பான ஆலோசனை வழங்க ஐந்து பேர் கொண்ட அறிஞர் குழுவைத் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. இவ் ஐவர் குழுவில் பல்வேறு துறையைச் சார்ந்த வல்லுநர்கள் இடம் பெற்றுள்ளனர். ஐவருள் ஒருவராகத் திருமதி. தாயம்மாள் அறவாணன் அவர்களை மூன்று ஆண்டுகளுக்குத் தமிழக அரசு அமர்த்தியுள்ளது.

திருமதி. தாயம்மாள் அறவாணன் பச்சையப்பன் நிறுவனப் பேராசிரியராக இருந்து வருபவர். ஆப்பிரிக்க செனகால் நாட்டில் ஐந்து ஆண்டுகள் இலக்கியத் துறை ஆசிரியராகப் பணியாற்றியவர். இவர் எழுதிய பல நூல்களுள் 'திராவிட— ஆப்பிரிக்க ஒப்பீடு' என்ற நூல் தமிழ்நாடு அரசு, தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசைப் பெற்றுள்ளது குறிப்பிடத் தகும்.

தமிழ்க் கவிஞர்களுக்கு ஒரு வேண்டுகோள்

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் புதுவை அரசினரால் ஏற்படுத்தப்பட்டு மொழியியல், இலக்கணவியல், இலக்கியவியல், நாட்டுப்புறவியல், பண்பாட்டியல் ஆகியவை தொடர்பான உயர்நிலை ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள ஒரு தன்னாட்சி ஆய்வு மையமாகும். தலை சிறந்த ஆராய்ச்சி நூல்களை வெளியிடுவதுடன், ஆங்கிலத்தில் Pilc Journal of Dravidic Studies. என்ற அரையாண்டு ஆராய்ச்சி இதழ் ஒன்றினையும் வெளியிட்டு வரும் இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ள பல்வேறு உயர்நிலை ஆராய்ச்சித் திட்டங்களுள் கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டமும் ஒன்றாகும்.

உலகெங்கிலும் இந்த நூற்றாண்டில் வெளியாகியுள்ள எல்லா வகையான தமிழ்க் கவிதைகளையும் திரட்டி, கணிப்பொறியின் துணைகொண்டு நிரல்படுத்தி, ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன்படும் வகையில் பாதுகாத்தல், இந்த நூற்றாண்டின் மரபு மற்றும் புதுக்கவிதைகளைத் தரவுகளாகக் கொண்டு கவிதையின் வடிவு உள்ளடக்க மரபுகளைக் கண்டறிதல், இந்த மரபுகளின் அடிப்படையில் இந்த நூற்றாண்டின் சிறந்த மரபுக் கவிதைகளையும் புதுக்கவிதைகளையும் பொருள் மற்றும் யாப்பு அடிப்படையில் வகுத்துத் தனித் தனியாகத் தொகுத்தல் முதலான இலக்குகளைக் கருத்தில் கொண்டு கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டத்தினைப் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் இந்த (1901-2000) நூற்றாண்டில் உலகெங்கிலும் வெளியாகியுள்ள எல்லாத் தமிழ்க்

கவிதைகளையும் திரட்டித் தொகுக்கும் பெரும் பணியில் மேற்படி ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

ஒரு நூற்றாண்டுக் காலப்பரப்பில் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலான நாடுகளில் வெளியாகியுள்ள தமிழ்க் கவிதைகளைத் திரட்டுவதென்பது நோக்கம்.

கவிஞர்கள் தாம் வெளியிட்டுள்ள கவிதைகளையும் தம்மிடம் நூல் வடிவில் உள்ள கவிதைகளையும் அருள் கூர்ந்து தன்னுடைய கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டத்துக்கு வழங்குமாறு புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் தமிழ்க் கவிஞர்களையும் தமிழ் ஆர்வலர்களையும் வேண்டிக்கொள்கிறது. அவ்வப்போது வெளியாகி, தொகுக்கப்பெறாமல் உள்ள கவிதைகளைத் தனித்தாளில் எழுதியோ, ஒளிப்படப் பிரதியாகவோ ஆசிரியர் பெயர், வெளியான இதழ், ஆண்டு ஆகியவற்றைக் குறிப்பிட்டு எங்களுக்கு அனுப்பி வைக்கலாம். கவிதை நூல்களை 25% கழிவு போக விலை கொடுத்துப் பெறவும் மேற்படி நிறுவனம் அணியமாயுள்ளது. விற்கவோ அனுப்பி வைக்கவோ இயலாத நிலையில் உள்ள கவிதைகளின் ஒளிப்படப் பிரதிகளை நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கலாம். இதற்கான செலவை நிறுவனம் ஏற்றுக்கொள்ளும்.

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ள கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டமானது உலகெங்கிலுமுள்ள வாழும் தமிழ்க் கவிஞர்கள், மறைந்த கவிஞர்களின் சந்ததியினர், தமிழ் ஆர்வலர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாததாகும். இந்தத் திட்டத்துக்குத் தமிழ்ப் பெருமக்கள் அளிக்கும் ஒத்துழைப்பானது தமிழ் இலக்கியத்துக்கும் எதிர்காலத் தமிழ்ச் சமுதாயத்துக்கும் செய்யும் சீரிய தொண்டாகும். கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டம் வெற்றி பெற இந்த நூற்றாண்டின் கவிதைகளை மேற்படி நிறுவனத்துக்கு அனுப்பி வைப்பதன் மூலம் தங்கள் மேலான ஒத்துழைப்பினை மேற்படி நிறுவனத்துக்கு விரைந்து நல்குமாறு தமிழ்க்கவிஞர் பெருமக்களையும், தமிழார்வலர்களையும் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

இரா. கோதண்டராமன்
இயக்குநர்,
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்,
19, சின்ன சுப்பராயப்பிள்ளை வீதி, புதுச்சேரி-600 001

மதிப்புரை

தமிழ்ச் சமுதாய நோய்கள்—வேரும் விழுதும்

[ஆசிரியர்: க. ப. அறவாணன், வெளியீடு: தமிழ்க் கோட்டம், 91, இரண்டாம் தெரு, மோகன் நகர், புதுச்சேரி-605005 விலை: ரூ. 40-00]

தமிழர் வாழ்வு சீரழிந்து கிடப்பது பற்றிச் சிந்தித்து, அவர்கள் வாழ்வில் புரையோடிப் போயிருக்கின்ற நோய்கள் அவர்களை வாழ்வில் முன்னேற முடியாமல் தடுக்கிறதே என்று கவலையுற்று, அந்த நோய்களை இனங்காட்டி, அவற்றை அகற்றினால் நல்லது என்ற நோக்குடன் பேராசிரியர் முனைவர் அறவாணன் இந் நூலை எழுதியுள்ளார். மக்கள் தொகைப் பெருக்கம், பொருள் நெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டம், தேவையான கல்வி கிடைக்காமை போன்ற பல காரணங்களால் இந்திய மக்கள் தனிமனித ஒழுக்கத்தைக் கோட்டை விட்டு வருகின்றனர். இவர்களின் ஒரு கூறாகிய தமிழர்கள் சீரழிவிற்குத் தங்களிடையே சில நோய்களைப் பரவ விட்டுள்ளனர். அவை எவையென்பதை ஆசிரியர் அழகுறச் சுட்டிக் காட்டுகிறார். சூது, குடி, வன்முறை, அரசியல், ஏமாற்று, கொலை, கொள்ளை பெண்ணடிமைத்தனம் போன்ற பொதுவான நோய்களுடன் சாதிச் சழக்கு, திரைப்படக் கவர்ச்சி போன்ற தமிழர்கட்கே உரிய நோய்களும் தமிழர்களை எப்படிப் பாதித்துள்ளன என்பதை ஆசிரியர் விரிவாக ஆய்கிறார்.

தமிழர்கள் முன்னேறாததற்கு முக்கியமான காரணம் சேர்ந்து செயல்படும் குழு உணர்வு இன்மையே என்கிறார் ஆசிரியர்.

தமிழ்ச் சமுதாயத்தில் பெருகிவரும் தீமைகள் மதிப்பிட 1500 ஆண்டுகட்கு முன் எழுந்த 'இன்னா நாற்பது' என்ற நூலில் 'இன்னா' என ஒதுக்கப்பட்ட குற்றங்களையும் இன்று நடைமுறையில் ஏற்படும் குற்றங்களையும் ஒப்பிட்டுக் காட்டி எவ்வாறு குற்றங்கள் பெருகியுள்ளன என்பதை ஆசிரியர் விளக்குகிறார். உலக முழுவதுமே கெட்டுக் கிடக்கும்போது தமிழர்களை மட்டும் குறை கூறுவதில் பயனில்லை என்று சொல்பவர்கட்குக் கூடைப் பழங்களில் அழுகாமல் இருக்கும் சில பழங்கள் தாமும் அழுக எண்ணாது தம்மைக் காப்பாற்றிப்

பிற பழங்களையும் காப்பாற்ற முயல வேண்டுமென்கிறார். சாதிப் பிரிவு தமிழரிடையே கடந்த அரை நூற்றாண்டாகப் பெரிதும் வளர்ந்து தமிழர் முன்னேற்றத்தைத் தடுத்து வருகிறது என்கிறார். பெண்டிரைத் தம்மோடு ஒக்க வைத்துப் பார்த்த ஆடவர் இன்று ஆரியத்தாக்கத்தால் அடிமைபோல் நடத்துவது தீது என்கிறார். திரைப்படக் கவர்ச்சி தமிழர்களிடையே குறைந்தாலொழியத் தமிழர் முன்னேற முடியாது என்பது அவர் கருத்து. படித்து, சிந்தித்து, நடைமுறைப்படுத்த வேண்டிய கருத்துக்களையுடைய பயனுடைய நூல். புதிய நோக்கில் துணிவான கருத்துக்களை எடுத்துக் கூறும் ஆசிரியர் பாராட்டுக்குரியவர்.

"செந்தமிழ்ச் செல்வி"

ஆண்டுக் கையொப்பம்		வாழ்நாள் கையொப்பம்	
உள்நாடு	ரூ. 25-00	உள்நாடு	ரூ. 250-00
வெளிநாடு	ரூ. 125-00	வெளிநாடு	ரூ. 750-00

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10 00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர், ஓய்வு)	5 00
திரு. முருக விசாகநம்பி அவர்கள்	5 00
திரு. A. T. A. ஈஸ்வர அடிகளார்	5 00
தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்	5 00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5 00
கல்லை. தே. கண்ணன் அவர்கள் [ஆசிரியர் 'வள்ளுவர் வழி']	5 00

031ம211,ந27
N92-66.6

பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்	5 00
திரு. K. வேணுகோபால், சென்னை-14	25 00
திரு. பழனி ஆறுமுகம் அவர்கள், சேக்கிழார் பதிப்பகம், கிள்ளான், மலேசியா.	15 00
திரு. த. ஆறுமுகம் அவர்கள், 51, வெங்கடராமய்யர் தெரு, சென்னை-79.	5 00
Sri. T. Subramany, 100, Circle Drive, WYE Bank-3640, South Africa.	100 00
திரு. Dr. இரா. அழகுவேல், 4/15, இணையகம், மறைமலை நகர்-603209.	5 00
திரு. வாழியூர் வே. இராசவேலன் (எம்)	20 00
திரு. பா. வீரமணி S. M. சென்னை துறைமுகம்	10 00
திரு. வி. எம். ஆனந்தன் S. M. சென்னை துறைமுகம்	5 00
திரு. எஸ். பி. சுப்பிரமணியம் S. M, சென்னை துறைமுகம்	5 00
திரு. குமாரதேவன் S. M. சென்னை துறைமுகம்	5 00
திரு. பாண்டியன் A. S. M. சென்னை துறைமுகம்	5 00
திரு. சுகுணதாஸ் A. S. M. சென்னை துறைமுகம்	5 00
திரு. தனசேகரன் சென்னை துறைமுகம்	5 00
திரு. பொன் தமிழ்வாணன் சென்னை துறைமுகம்	10 00
திரு. ச. கலியமூர்த்தி, 285, காவேரி நகர், புதுக்கோட்டை மாவட்டம்-622501	10 00
திரு. மா. இலக்குவன் I. O. B. 285, காவேரி நகர், புதுக்கோட்டை மாவட்டம்-622501	10 00
மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் (15-1-1981) திரு. மேல நெடுஞ்சேரலாதன் 285, காவேரி நகர், புதுக்கோட்டை மாவட்டம்-622501	5 00

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை-108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது. ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி எம்.ஏ., பி.லிப்.

191729

கழகப் புதிய வெளியீடுகள்

இக்காலத் தமிழ் மரபு

டாக்டர் கு. பரமசிவம் 55 00

ஈராயிரமாண்டுகட்கு மேலாகத் தொடர்பாகப் பேசப் பட்டும் எழுதப்பட்டும் வரும் தமிழ்மொழி, பல்வேறு ஆட்சிமாற்றங்களும், கால நெருக்கடிகளும், பிறமொழி களின் தாக்கங்களும் இருப்பினும் தன் சீரிளமை குன்றாமல் இருக்கும் அதன் இலக்கணக் கட்டுக் கோப்புகளும் அதன் முக்கியக் கூறுகளும் சிறப்பாகவும் தெளிவாகவும் இந்நூலில் ஆயப்பெற்றுள்ளன.

பாவேந்தரும் குழந்தைகளும்

கழக இலக்கியச் செம்மல்
புலவர் இரா. இளங்குமரன் 8 00

இருபதாம் நூற்றாண்டில் எழுச்சிப்பாவலர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார், பாட்டுக்கொரு புலவனாம் பாரதிக்கு அன்பனாயும், தாசனாயும் இருந்தபடியால் தமிழ்மேற்கொண்ட பேரன்பு மட்டுமின்றிச் சிறுவர் களையும் மறவாது இளைஞர்களுக்காக ''இளைஞர் இலக்கியம்'' என்ற தனித் தொகுப்பு வெளிவரும் அளவிற்கு இனிய கவிதைகள் பாடியுள்ளார். அவர் அவ்வாறு பாடிய பாடல்களை எளிய இனிய முறை யில் இந்நூலைத் தமக்கே உரிய செந்தமிழ் நடையில் இயற்றியுள்ளார் ஆசிரியர்.

பரமார்த்த குரு-2 (இரண்டாம் பரமார்த்த குரு)

குழந்தை இலக்கிய மாமணி
டாக்டர் பூவண்ணன் 20 00

தமிழில் முறையான உரைநடை இலக்கியம் தோன் றாத காலத்திலேயே தமிழகத்திற்குக் கிறித்துவ சமயத்தைப் பரப்பவந்த பெஸ்கி என்ற வீரமாமுனிவர் பதினெட்டாம் நூற்றாண்டில் நகைச்சுவை நிரம்பிய ''பரமார்த்த குரு'' என்ற கதை நூலைப் படைத் ததைப் பின்பற்றி அதன் தொடர்ச்சியாகப் பரமார்த்த சீடர்கள் என்ற அரிய சிறு நாவலைப் பூவண்ணன் அவர்கள் படைத்து அதன் பின்பு அச் சீடர்களில் ஒருவரையே இரண்டாம் பரமார்த்த குருவாகப் படைத்துச் சிறுவர்கள் ஆர்வமுடன் கையிலெடுத்து நூல் முற்ற முடியாமல் கீழே வைக்க இயலாத சுவை யுடன் எழுதியிருக்கின்றார்.

பதிவு எண்: M/4899 FEB, .1992

ASIAN EDUCATIONAL SERVICES

(C-2/15, SDA, NEW DELHI-110 016.)

Branch: No. 5, Sripuram First Street,
Royapettah, Madras-600 014.
Phone No. 865040

The Travancore State Manual - 3 Vols. — NAGAMAIYA V.	1195	00
A Dictionary of Tamil and English Based on Tranqebars' Malabar English Dictionary — FABRICIUS J. P.	95	00
A Classified Collection of Tamil proverbs — REV HERMAN JENSEN	50	00
"Inge Va" or the Sinna Durai's Pocket Tamil Guide — FERGUSON A M.	65	00
A Dictionary-Tamil and English — VISWANATHA PILLAI V.	95	00
Thirukkural Original Tamil with English Translation — REV. DREW & LAZARUS (Translators)	15	00

Books can be had of:

The South India Saiva Siddhantha Works, Publishing Society, Tinnevelly, Ltd.,
154, T. T. K. Road, Madras-600018.

Branches:

79, Prakasam Saalai (Broadway), Madras-108.
Tirunelvelli-6. Madurai-1. Coimbatore-1,
Kumbakonam-1. Trichirappalli-2. Salem-1.

அப்பர் அச்சகம், சென்னை-108.